# வக்கீல்

204

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1954

204
2-54.

ரஸமாக...

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

THE VAKIL • TAMIL LAW MAGAZINE.




மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற
—: அறந்தாங்கி :—
# 786 சங்கு சோப்பை
**வாங்கி உபயோகியுங்கள்**
**கட்டி 1-க்கு அணு 0-1-3தான்**




தயாரிப்பவர்:-
இ. கா. ரு. மு. காதர் நயினு முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.





"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சந்தாதாருடைய விலாசமும் சரிபார்த்து அனுப்பப் படுவதால் தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 10 தேதிக்குள் உங்களிடம் கிடைக்கா விட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும். சந்தா முடிந்தவர்கள் புதிய சந்தா அனுப்பிய பிறகே அவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படும். வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தாத் தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர்செய்து அனுப்ப லாம். சந்தா விபரமும், விளம்பர விகிதமும் பின் அட்டைப் பக்கத்தில் இருப்பதைக் கவனிக்கவும்.

*V. S. & Sons*

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்

## பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள்:

**தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,**

கும்பகோணம்.

(Estd. 1925)



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
APR 1954
MADRAS

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக்
கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள

**பட்டு ஜவுளி தினுசுகள்**

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்:

**ராணி ரெங்கய்யர்**
**சன்ஸ்**

**கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்**
கெருடலாயத் தெரு,
**கும்பகோணம்.**

**பிராஞ்சு:**
**20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,**
**மதுரை.**

குணமில்லையென்று நிரூபிப்பவருக்கு மருந்து
தொகையுடன் ரூ. 100 இனாம்.

**இளம்பிள்ளை வாதம்**
**நீடித்ததற்கும் உத்தரவாத சிகிச்சை**
**இளம்பிள்ளை வாதம்-பட்சவாதம் ஒன்றே**
ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 25
குஷ்டம்:-கண் சிவந்திருத்தல், மூக்கு திறந்திருத்தல், அதிக வியர்வை இவைகள் இல்லாதது சிகிக்சைக்கு உத்தரவாதம்.
ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 20.
யானைக்கால்:-சதை கெட்டிப்படாது தளதளப்போடு சுமார் 3 வருடத்திற்கு மேற்படாதது சிகிச்சைக்கு உத்தரவாதம்.
ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 15.
உபயோகிக்கும் முறை மருந்துடன் நற்சாட்சி தேவைக்கு, சுமார் 25 வருஷம் அனுபவம். ஆர்டருடன் அட்வான்ஸ் ரூ 2. தேவை. வெளிநாடுகளுக்கு மருந்துக்கு முன் பணமும் தபால் சார்ஜ் ரூ. 2ம் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.
**M. R. ராஜகோபால் பிள்ளை** R.M.P.
மன்னப்பிள்ளைத் தெரு, மன்னார்குடி.

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ **அன்னகிளி** ★
**சோப்**
— தயாரிப்பவர் —
**சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்**
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

# வக்கீல்

## பொருள் அடக்கம்

மலர் 6 — பிப்ரவரி 1954 — இதழ் 2


காங்கிரசும் அமெரிக்காவும் 3

தமிழ் - சென்னை ராஜ்யத்தின் அரசாங்க பாஷை? 4

சுயமரியாதைத் திருமணப் பதிவுச் சட்ட மசோதா 4

புதிய சட்டங்கள் 5

கடன்பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்டம் (1954) 7

சர்க்கார் அறிக்கைகள் 10

தொழிற்சாலைச் சட்டம் 11

'எஸ்டேட்' வரிச் சட்டம் 17

வழக்கும் - தீர்ப்பும்

இந்துச் சட்டம் இறந்தவருடைய சமாதி கைங்கர்யத்திற்காகச் சாசுவதமாகச் சொத்தை எழுதிவைப்பது செல்லாது 19

கேள்வியும் – பதிலும் 21

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!


X 187728


மலர் 6 | பிப்ரவரி 1954 | இதழ் 2


## காங்கிரசும் அமெரிக்காவும்

வருடா வருடம் கூடிக் கலேயும் காங்கிரஸ் மகா சபையானது இவ்வருடமும், கல்கத்தாவில் கூடிக் கலேந்துவிட்டது. சில வருடங்களுக்கு முன் இந்தியா சுதந்தரம் அடைய வேண்டுமே என்று கவலேகொண்டிருந்த காங்கிரஸ் மகா சபைக்கு இன்று வேறு ஒரு கவலே தோன்றியுள்ளது. நாம் அடைந்த சுதந்தரத்தை மறுபடியும் அயல் நாட்டினருக்குப் பறி கொடுக்காமல் இருக்கவேண்டுமே என்ற ஒரே கவலே தான் இன்றைய காங்கிரசுக்கு. காங்கிரசுக்கு மட்டுமென்ன; இந்தியாவிலிருக்கும் எல்லாக் கட்சிகளுக்கும், எல்லா மக்களுக்கும் இன்று அதே கவலேதான். முன்பு கூடிய காங்கிரஸ் கூட்டங்களே நம்மை அடக்கி ஆண்டுவந்த ஆங்கிலேயன் மட்டில் கவனித்து வந்தான். இன்றைய காங்கிரசின் நடவடிக்கைகளே, இப்பூவுலகம் முழுதும் கவனித்து வருகின்றது. அமெரிக்கா கவனித்து வருகின்றது; ருஷ்யா கவனித்து வருகின்றது; பிரிட்டன் கவனித்து வருகிறது, சீன கவனித்து வருகிறது; பாகிஸ்தான் கவனித்து வருகிறது. ஏன்? இந்திய வானத்தில் யுத்த மேகங்கள் புலப்படுவதுதான் காரணம்.

ஆங்கிலேயரைக் கண்டு பயப்பட வேண்டாமென்று மக்களிடையே ஒரு தெய்வீகச் சக்தியை வளர்த்த மஹாத்மா மறைந்துவிட்டால் என்ன? இப்பூவுலகே திரண்டு வந்தாலும் பயப்பட வேண்டாமென்று அறை கூவும் நமது நேரு ஒருவரே நமக்குப் போதும்; நம்மை அமெரிக்கா என்ன செய்ய முடியும்?

இருந்தாலும் நம்முடன் நேற்றுவரை கூட வசித்துவந்து, இன்று நம்மை விட்டுப் பிரிந்து போயிருக்கும், நமது சகோதர பாகிஸ்தானத்தைப் பார்த்து இரண்டொரு புத்திமதி வார்த்தைகள் சொல்ல நமக்கு உரிமை இல்லேயா? அது ஒரு கடமை என்றே சொல்லவேண்டும்.

"உங்கள் நாடு சுதந்தர நாடுதான். ஆனால் அங்கே அன்னியரை, அதுவும் ஆயுத தளவாடங்களுடன் கூடிய அன்னியரைப் புகவிடாதீர்கள். நாளடைவில் நீங்கள் அவர்களுக்கு அடிமையாகி விடுவீர்கள்" என்றுதானே நமது காங்கிரஸ் மகா சபையானது பாகிஸ்தானேப் பார்த்துச் சொல்லி இருக்கின்றது, இதில் தவறு என்ன? ஆசியா முன்னேறவேண்டுமென்ற உண்மை எண்ணம் அமெரிக்காவுக்கு இருந்திருந்தால், தனது அணு குண்டை முதல் முதலாக இரண்டு லட்சம் ஆசிய மக்கள் தலேமீது போட்டு அவர்களே, அமெரிக்கா ஒரு நொடியில் பொசுக்கி இருக்குமா? இந்தோனீசியாவில் வசிக்கும் ஆசிய மக்களே அடக்கியாள ஆசை கொண்டிருக்கும் ஒரு பேடி ஐரோப்பிய

நாட்டிற்கு அமெரிக்காவானது யுத்த தளவாடங்களைக் கொடுத்து உதவி செய்து கொண்டு வருமா? முன்பு சீனாவில் ஆட்சி புரிந்த சியாங்கேஷேக்குக்கு ஆயுத தளவாடங்களைக் கொடுத்து அமெரிக்காவானது உதவி புரிந்ததே, அக்கதை என்ன ஆயிற்று? அமெரிக்கா, தன் கண்ணோட்டத்தைச் செலுத்தும் ஆசிய நாடுகள் எல்லாம் வேகமாகக் கம்யூனிஸ்ட் நாடுகளாய் விட்டன! பாகிஸ்தான்! உஷார்! உங்கள் நாட்டில் அமெரிக்க ராணுவத்திற்கு நீங்கள் இடங்கொடுத்து விட்டால், உங்கள் சுதந்தரம் போய்விடும்; உங்களுடைய மதிப்பும் குறைந்துவிடும். அமெரிக்காவின் அடிமை நாடாகவே உலகம் உங்களை மதிப்பிடும். நீங்கள் எந்தச் சுதந்தர நாட்டுடனே, சுதந்தர இந்தியாவுடனே சரி சமனாகக்கூட உட்கார்ந்து பேச முடியாது என்பதை ஆலோசித்துப் பாருங்கள்!

## தமிழ் சென்னை ராஜ்யத்தின் அரசாங்க பாஷை?

1-4-1954 முதல் சென்னை அரசாங்க அலுவல்களெல்லாம் தமிழில் நடத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் சட்டம் ஒன்றை இயற்ற, சென்னை மேல் சட்ட சபை அங்கத்தினர் திரு. ஏ. கஜபதி நாயகர் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். தமிழ் பேசாத இரண்டு ஜில்லாக்கள்தான் இப்போது சென்னை ராஜ்யத்தில் அடங்கி இருக்கிறது. இந்த ஜில்லாக்களுக்கு மட்டில் விதிவிலக்கு அளிக்கவும் அம்மசோதாவில் ஒரு ஷரத்து இருக்கின்றது.

ஆனால் இது சர்க்காரால் கொண்டு வரப்படும் மசோதா அல்ல. காங்கிரஸ் கட்சியும் காங்கிரஸ் சர்க்காரும் இதை ஆதரிக்குமா என்பது சந்தேகம்தான். மக்களுக்கும் தங்களுக்குமுள்ள வித்தியாசங்களை நடைமுறையில் காண்பித்துக் கொண்டேதான் ஆங்கிலேயர் இந்நாட்டை வெகுகாலம் ஆண்டுவந்தனர். இன்றைய காங்கிரசும் அதே முறையைத்தான் உள்நாட்டு ஆட்சியில் கையாண்டு வருகின்றது. பாமரமக்கள் வேறு; அரசாளும் காங்கிரஸ் மனிதன் வேறு—இது மக்களுடைய மனதில் நன்றாகப் படிவதில்தான் இருக்கிறது இன்றைய காங்கிரஸ் ஆட்சியின் நீடிப்பு. இதற்குச் சாதகமாக இருப்பதுதான் அரசாங்கத்தைப் பாமரமக்களுக்குப் புரியாத ஒரு பாஷையில் நடத்துவது. நமது காங்கிரஸ் சர்க்கார் இம்மசோதாவை ஆதரிக்கின்றார்களா அல்லது சாக்குப் போக்குச் சொல்லுகின்றார்களா – என்பதைக் கவனிப்போம். இம் மசோதாவைச் சட்டமாக்க நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் தடை ஒன்றுமில்லை. ஆனால் இது சட்டமாவது சந்தேகம்தான்.

## சுயமரியாதைத் திருமணப் பதிவுச் சட்ட மசோதா

இது சென்னைச் சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கும் ஒரு மசோதா. இன்னும் சட்டமாகவில்லை. இதற்கு "இந்து முறைப்படி நடக்காத திருமணப் பதிவுச் சட்டம்" (Hindu Non-Conforming Marriages Registration Act 1954) என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டம் அமுலுக்கு வருமுன் நடந்த திருமணங்களை பட்டில்தான் இச்சட்டப்படி பதிவு செய்து கொள்ளலாம்.

இச்சட்டம் இந்துக்களுக்குள் நடந்த திருமணங்களுக்குத்தான் பொருந்தும். இந்துச் சட்டப்படிக்கோ, அல்லது தொன்று தொட்ட பழக்க வழக்கங்களின் படிக்கோ அல்லது திருமணப் பதிவுச் சட்டப்படிக்கோ திருமணம் நடத்தாமல் வேறு முறையில் நடந்திருக்கும் திருமணங்களை இச்சட்டப்படிப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொண்டு விட்டால் அவை செல்லுபடியாகிவிடும். எந்த இடத்தில் இவ்விதத் திருமணம் நடந்ததோ அந்த இடத்தின் தாலூகா தாசில்தாருக்கு மனுக் கொடுக்க வேண்டும். சென்னை சிட்டியாக இருந்தால் எந்த ரேஞ்சில் திருமணம் நடந்ததோ அந்த இடத்திற்கான தாசில்தாருக்கு மனுக் கொடுக்க வேண்டும்.

திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் இருவரும் சேர்ந்து இவ்வித மனுப்போட வேண்டும். இருவரில் ஒருவர் இறந்துவிட்டால் மற்றவர் போடலாம். தம்பதிகள் இருவரும் இறந்து போய்விட்டாலும் அவர்களுடைய ஆண் மக்களோ பெண்மக்களோ மேஜராகி

இருந்தாலும் இம்மனுப் போடலாம் என்று மசோதாவில் இருக்கிறது.

இச் சட்டம் அமுலுக்கு வந்த இரண்டு வருடங்களுக்குள் மேற்கண்டபடி மனுப்போட வேண்டும். ஆண் அல்லது பெண்மக்கள் இச் சட்டம் அமுலுக்கு வந்த இரண்டு வருடங்களுக்குள்ளோ அல்லது மேஜராகி இரண்டு வருடத்திற்குள்ளோ, எது பிந்தி இருக்கிறதோ அந்தக் கெடுவுக்குள் மனுப்போடவேண்டும்.

இம்மனுவை வாங்கிக்கொண்டு, தாசில்தார் ஒரு விசாரணைத் தேதி குறிப்பிடுவார். மனுதார்கள் அன்று ஆஜராவதுடன் இரண்டு சாட்சிகளையும் கூட அழைத்துப் போக வேண்டும், மனுவில் கண்டிருக்கும் திருமணம் நடந்தபோது அதில் கலந்துகொண்டவர்களும் சாட்சியாக விசாரிக்கப்படலாம்; அல்லது திருமணம் செய்துகொண்டவர்கள் குறைந்தது 10 வருடகாலமாவது கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்திய விபரம் தமக்கு நேரில் தெரியுமென்று உறுதி சொல்லக் கூடிய சாட்சிகளாகவும் இருக்கலாம். மனுவில் கண்ட திருமணத்தின் விவரங்களைத் தாசில்தார் எழுதிக்கொள்வார். மனுதார்களும் சாட்சிகளும் அதில் கையெழுத்துச் செய்யவேண்டும். தாசில்தாரும் அதில் கையெழுத்துச் செய்வார். இது தான் பதிவு செய்துகொள்ளும் முறை. இவ்விதம் பதிவு செயது கொண்டதற்கு யாரும் (கட்டணம் கட்டி) நகல் வாங்கிக் கொள்ளலாம். மனுவிலோ, சாட்சிகளின் உறுதி மொழிகளிலோ பொய் சொல்லுவது குற்றமாகும். மூன்று வருடம் வரை சிறைத் தண்டனையோ, அபராதமோ இல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

இவ்விதம் பதிவு செய்து கொண்ட திருமணத் தம்பதிகளுடைய திருமணம் செல்லாதென்றோ, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு வார்சுபாத்தியம் கிடையாதென்றோ ஒருவரும் கட்சி சொல்ல முடியாது.

மனுவின் நமூனா, மனுவுக்கான ஸ்டாம்பு முதலிய விபரங்களைப்பற்றி விதிகள் ஏற்படுத்தச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம
Prop: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

## 1953-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

33. அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம். 1953. The Appropriation (No. 4) Act 1953. (29-9-1953.) 1953–54 நிதி வருடத்தில் இன்னும் ரூ. 10,35, 90,000 செலவு செய்ய மத்திய சர்க்காரை அனுமதிக்கும் சட்டம்.

34. 'எஸ்டேட்' வரிச்சட்டம் The Estate Duty Act, 1953. (6-10-1953.) இச் சட்டம் 1953-ஆம் வருடத்திய 34. ஆவது மத்திய சட்டம். (1953 நவம்பர் 'வக்கீல்' இதழில் இச்சட்டத்தின் எண் '33' என்று இருப்பது பிழை. அதை '34' என்று திருத்தி வாசிக்கவும்.) 15-10-1953 அல்லது அதற்குப் பிறகு இறந்துபோகும் நபருடைய ஆஸ்திக்கு ஒரு வரி விதிக்கும் சட்டம். இச்சட்டம் 1953 அக்டோபர் "வக்கீல்" இதழில் விளக்கப்பட்டதுடன் இச்சட்டம் பற்றிய விவரங்கள் பிந்திய "வக்கீல்" இதழ்களிலும் பாகம் பாகமாக விளக்கப்பட்டு வருகின்றதை நேயர்கள் கவனிக்கவும்.

37, தொழிலாளர் சேமிப்பு நிதி திருத்தச் சட்டம். The Employee's Provident Funds Amendment Act 1953. (12-12-1953.) இச் சட்டத்தில் பல முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முக்கியமாக, திருத்தி அமைக்கப்பட்ட செக்ஷன் 12-இன்படி, இச்சட்டப்படி தொழிலாளர் சேமிப்பு நிதிக்காகக் கட்டணம் கட்டிவரவேண்டிய தொழிற்சாலை முதலாளிகள் அக்காரணத்தைக் கொண்டு தொழிலாளர்களுடைய சம்பளத்தையோ, அவர்கள் அடைந்து வரும் அனுகூலங்களையோ, நேரிடையாகவாவது, மறைமுகமாகவாவது குறைக்கக் கூடா

தென்பது. புதிய செக்ஷன் 14 (2A)இன்படி இச்சட்ட ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு மூன்று மாதம் வரை சிறைத் தண்டனையோ, ரூ, 1000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாமென்று சேர்க்கப்பட்டிருக்கிறது. 1953 ஆம் வருடத்திய 1ஆவது மத்திய அவசரச் சட்டமானது இப்பார்லிமெண்ட் சட்டத்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தால் ஏற்பட்ட மற்றத் திருத்தங்கள் 1953-டிஸம்பர் "வக்கீல்" இதழ் 1ஆவது அவசரச்சட்டம் என்ற தலைப்பின் கீழ் பார்க்கவும். அவசரச் சட்ட ஷரத்துக்கள் தான் இச்சட்டத்திலும்.

39. மில் வேஷ்டிகளுக்கு அதிகச் சுங்கவரி விதிப்புச் சட்டம். Dhoties-Additional Excise Duty Act 1953. (16-12-1953) 1953 ஆம் வருடத்திய 6-வது மத்திய அவசரச் சட்டம் தான் பார்லிமெண்டால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. 1953 டிசம்பர் "வக்கீல்" இதழ் பார்க்கவும்.

42. பொது ரத்து, திருத்தச் சட்டம். The Repealing and Amending Act 1953. (23-12-1953.) அமுலில் இல்லாத பல சட்டங்களும், இப்போது இந்தியாவுக்குப்பொருந் தாத சில சட்டஙகளும் இச் சட்டத்தின் மூலம் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. சில சட்ட ஷரத்துக் களின் வாசகங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன.

43. தொழில் தகராறு சட்டத்திருத்தம். The Industrial Disputes Amendment Act 1953 (23-12-1953.) இது 1953ஆம் வருடத்திய 5-ஆவது அவசரச் சட்டத்திற்குப் பதிலாகப் பார்லிமெண்டால் இயற்றப்பட்ட சட்டமாகும். இதன் விபாமும் 1953 டிசம்பர் "வக்கீல்" இதழில் வெளியாக்கப் பட்டுள்ளது.

45. தென்னைநார் கைத்தொழில் சட்டம். The Coir Industry Act 1953. (23-12-1953) தென்னைமட்டை நாரிலிருந்து செய்யப்படும் கயிறு, பாய், ரக், கார்பெட் முதலிய சாக்குகளை உற்பத்தி செய்யும் கைத் தொழில்களைக் கட்டுப் படுத்துவதற்காகவும், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் தென்னை நார் சரக்குகளுக்கு ஒரு வரி விதிப்பதற்காகவும் இயற்றப்பட்ட சட்டம், 'காயிர் போர்டு' (Coir Board) என்று ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்படும். தென்னைநாரிலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய சரக்குகளை அபிவிருத்தி செய்யவும், தரம் பிரிக்கவும், இவைபற்றிய புள்ளி விபரங்கள் சேகரிக்கவும், விளம்பரம் செய்யவும், இவை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை அபிவிருத்தி செய்யவும் இப்போர்டாருக்கு அதி காரம் உண்டு. தென்னைநார் சரக்குகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இச்சட்டப்படி லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும், ஏற்று மதியாகும் சரக்குகளுக்கு அந்தர் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேற்படாத 'செஸ்' விதிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கி றது. இத்தொகை மேற்கண்ட போர்டாருக்குக் கொடுக்கப்படும். இச்சட்டம் மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும்தேதியிலிருந்து அமுலுக்குவரும்.

46. தவணை ஒப்பந்த ஒழுங்குச் சட்டத் திருத்தம் Forward Contracts Regulation Amendment Act 1953. (23-12-1953) 1952-ஆம் வருடத்திய 74-ஆவது சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. (அச்சட்டம் "வக்கீல்" 1953 மார்ச்சு இதழ் பக்கம் 5-ல் விளக்கப்பட்டிருக்கிறது.) எந்தச் சரக்குக்காவது இச்சட்டம் விஸ்தரிக்கப்பட் டால், அச்சரக்குச் சம்பந்தமாயுள்ள முந்திய சட்டங்கள் இச்சட்ட விஸ்தரிப்புத் தேதி முதல் ரத்தாகிவிடுமென்று இப்பொழுது திருத்தப்பட் டிருக்கிறது.

47. இந்தியத் தீர்வைச் சட்டத்தின் இரண் டாவது திருத்தம். Indian Tariff Second Amendment Act 1953 (25-12-1953.)

48. இந்தியத் தீர்வைச் சட்டத்தின் மூன்று வது திருத்தம். Indian Tariff Third Amendment Act 1953. (26-12-1753)

49. உப்புத் தீர்வைச் சட்டம். The Salt cess Act 1953. (26-12-1953) உப்பு உற் பத்திக்கு இப்போதும். ஒரு 'செஸ்' விதிக்கப் பட்டு வருகிறது. அதைச் சட்ட பூர்வமாக்கவே இச்சட்டம் இயற்றபட்டிருக்கிறது.

50. அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம். Appropriation (No 5) Act 1953. (26-12-1953) 1953-54. நிதி வருடத்தில் ரூ. 14,66,35,000 செலவு செய்ய மத்திய சர்க்காரை அனுமதிக்கும் சட்டம்.

52. பாங்குக் கம்பெனிச் சட்டத் திருத்தம். The Banking Companies Amendment Act 1953. (30-12-1953) முறிந்த பாங்குகள் சம்பந்தமாய், துரிதமாக நடவடிக்கைகள் எடுத் துக் கொள்வதற்கான ஷரத்துக்கள் அடங்கிய ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 1953-ஆம் வருடத்திய 4-ஆவது மத்திய அவசரச்சட்டம். அந்த அவசரச்சட்டத்திற்குப் பதிலாக இத்திருத்தச் சட்டம் பார்லிமெண்டால் இயற்றப்பட்டிருக்கிறது. முறிந்த பாங்கின் தலைமைக் காரியாலயம் எங்கே இருக்கிறதோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள ஹைகோர்ட் டிலேயே தான் அப்பாங்கு சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளும் நடத்தப்பட வேண்டு மென்ற ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ் வொரு ஹைகோர்ட்டிலும் முறிந்த பாங்குகளுக் கென ஒரு தனி 'லிக்விடேட்டர்' நியமிக்கப்படு வார்.

# சென்னை கடன்பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்டம் (1954)

## [1954-ஆம் வருடத்திய 5வது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் இயற்றப்பட்டது]

[6-2-1954 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டு அத்தேதி முதல் அமுலுக்கு வந்து விட்டது. 5-12-1953ல் சென்னை கவர்னர் அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட அவசரச் சட்டத்தை ரத்துச் செய்து அதற்குப் பதிலாகச் சென்னை சட்டசபையானது இச்சட்டத்தை இயற்றி இருக்கின்றது. அவசரச் சட்டத்திற்கும் இச்சட்டத்திற்கும் சில இடங்களில் மாறுதல்கள் இருப்பதைக் கவனிக்கவும்.]

### சட்டத்தின் பெயர்.

இச்சட்டத்திற்குச் சென்னை கடன்பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்டம் (1954) Madras Indebted Agriculturists Temporary Relief Act 1954-என்று பெயர். இச்சட்டம் சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலில் இருக்கும்.

### இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி.

இச்சட்டமானது சென்னை சர்க்கார் கெஜட்டில்பிரசுரம்செய்யப்பட்ட தேதியாகிய 6-2-1954 தேதியில் அமுலுக்கு வந்து விட்டது.

### "விவசாயி" என்பது யார்?

இச்சட்டப்படி பரிகாரம் அடைபவர்கள் "விவசாயிகள்". ஆனால் "விவசாயி" (Agriculturist) என்பது யார் யாரைத்தான் குறிக்கும் என்று இச்சட்டத்திலேயே அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. நிலத்தில் ஏதாவது பாத்தியமிருந்து அப்பாத்தியதையின் காரணமாக அந்நிலத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பவர்களும்; அல்லது அப்பாத்தியதை காரணமாக அந்நிலத்தின் குத்தகை வாரம் அல்லது வருமானத்தை அடைந்து வருபவர்களும் தான் இச்சட்டப்படி விவசாயிகளாவார்கள். நிலத்தின் குத்தகை அல்லது வார சாகுபடிக்காரர்களும் விவசாயிகளே. 'நிலம்' என்றால் விவசாயத்திற்காகவோ, தோட்டப் பயிர் செய்வதற்காகவோ உபயோகிக்கப்படும் நிலத்தைத் தான் குறிக்கும். ஆனால் குடியிருப்பு வீட்டைச் சேர்ந்த நிலமாக இருக்கக்கூடாது.

(அதாவது வேறு எவ்வித நிலத்திலும் பாத்தியதை இல்லாத ஒருவர் தம்முடைய குடியிருப்பு வீட்டைச் சேர்ந்த நிலத்தில் தோட்டப் பயிர் முதலிய செய்வதாகச் சொன்னால் அவர் இச சட்டப்படி 'விவசாயி' அல்ல.) மேலும் கூட்டு வியாபாரங்களும், கம்பெனிச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளும் "விவசாயி"களாக மாட்டார்கள். மேலும் 1951-52; 1952-53 அல்லது 1953-54 இந்த மூன்று வருடங்களில் எந்த வருடத்திலாவது "இன்கம் டாக்ஸ்" என்ற வருமான வரி விதிக்கப்பட்டவர்களும் "விவசாயி"களல்ல. ஒரு பிரிபடாத இந்துக் குடும்பமானது "விவசாயி"யாக இருந்தால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் "விவசாயி"தான். ஆனால் இவர்களிலும் மேற்கண்ட வருடங்களில் வருமானவரி விதிக்கப்பட்டவர்கள் 'விவசாயி' களாகமாட்டார்கள். செக்ஷன் 2 (a)

### 'கடன்' (Debt) என்றால் எதைக் குறிக்கும்.

இரண்டாவதாக விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன் சம்பந்தப்பட்ட வரையில்தான் இச்சட்டம் பரிகாரமளிப்பதால், 'கடன்' என்பது என்ன என்றும் இச்சட்டத்திலேயே அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. 'கடன்' என்பது பிரதிப் பிரயோஜனத்தின் பேரில் ஒருவர் ஒப்பந்தப்படி கொடுக்கவேண்டிய பணத் தொகையைக் குறிக்கும். ஒருவர் நிலத்தை சட்டபூர்வமாக அனுபவிப்பதற்காக கொடுக்கவேண்டிய பகுதி அல்லது குத்தகைத் தொகையும் தானியமும் இச்சட்டப்படி 'கடன்'தான். அடமானம் அல்லது ஜாமீன் ஜவாப்தாரியைக் கொண்டு மட்டில் வசூல் செய்யப்படவேண்டிய தொகைகளும் 'கடன்' என்பதில் அடங்கியவையே. ஆனால் வீட்டில் குடியிருப்பதற்காகக் கொடுக்கவேண்டிய வாடகைத் தொகைகளும், வீடு தவிர மற்ற ஸ்தாவர சொத்துக்களுக்காக அதாவது நிலத்திற்காக 31-3-1953 தேதிக்குப் பிறகு கொடுக்கப்படவேண்டிய குத்தகை அல்லது வாரமும் 'கடன்' என்பதில் சேர்க்கப்படவில்லை. (அதாவது வீட்டு வாடகைக்கும், நிலங்களுக்காக 31-3-1953 தேதிக்குப் பிறகு

கொடுக்கவேண்டிய குத்தகை அல்லது வாரத்திற்கும் இச்சட்டத்தால் எவ்வித பரிகாரமும் அளிக்கப்படவில்லை.)

மேலும், நம்பிக்கைத் துரோகம் காரணமாக ஒருவர் கொடுக்கவேண்டிய தொகைகளும், ஜீவனும்சத் தொகைகளும், மத்திய சர்க்கார் அல்லது ராஜ்ய சர்க்கார் அல்லது ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய வரி செஸ் கடன் முதலிய தொகைகளும் கூட்டுறவு சங்கங்களுக்கும் சில அடமான பாங்குகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகைகளும சேவை அல்லது ஊழியத்திற்காகக் கொடுக்கப்படவேண்டிய கூலி அல்லது சம்பளங்களும் இச்சட்டப்படி 'கடன்' என்பதில் சேர்க்கப்படவில்லை. (செக்ஷன். 2 (b))

## விவசாயிகள் மீது ஒரு வருடத்திற்கு கடன்களைப் பொறுத்து தாவாக்களும் நிறைவேற்று மனுக்களும் போடக் கூடாது

இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி முதல் ஒரு வருடம் வரையில் விவசாயிகள் மீது அவர்கள் கொடுக்க வேண்டிய கடனை வசூல் செய்யும் பொருட்டு எந்த சிவில் அல்லது ரிவின்யூ கோர்ட்டிலும் தாவா தொடரக் கூடாது; கடனுக்காக விவசாயிகள் மீது ஏற்பட்ட டிக்ரிகளையும் மேற்கண்ட ஒரு வருடம் வரை நிறைவேற்ற மனுக்கள் கொடுக்கக் கூடாது; கடனைக் கொடுக்காத காரணத்தினால் நிலத்தை விட்டு விவசாயியை அகற்ற வேண்டுமென்று தாவாவோ மனுவோ மேற்கண்ட கெடுவுக்குள் போடவும் கூடாது. விவசாயியுடன் விவசாயி அல்லாதவரும் சேர்ந்து கொடுக்க வேண்டிய கடன்களைப் பொறுத்து விவசாயி அல்லாதவர் மீதும் மேற் கண்ட கெடுவுக்குள் தாவாவோ மனுவோ போடக் கூடாது. 'தாவா' அல்லது 'மனு' என்பதில் அப்பீல், ரிவிஷன் அல்லது ரிவ்யூ மனுக்கள் சேர்ந்ததல்ல. ஆதலால் தாவா அல்லது மனுக்களின் பேரில் ஏற்பட்டிருக்கும் டிக்ரி அல்லது உத்தரவுகளின் மீது அப்பீல் செய்யவும், ரிவிஷன் அல்லது ரிவ்யூ மனுக்கள் போடவும் இச்சட்டத்தால் எவ்விதத் தடையுமில்லை. கடனை வசூல் செய்யப் போடப்படும் தாவாவில் வேறு பரிகாரங்களும் கேட்கப் பட்டிருந்தாலும், அவைகள் கடனை வசூல் செய்யவே போடப்பட்ட தாவாக்களாகவே பாவிக்கப்படும். ஆனால் நிலத்தின் சுவாதீனம் கிடைக்க வேண்டுமென்று போடப்படும் தாவாவில் நிலத்தின் வருமானமும் சேர்ந்து கேட்கப்படும் காரணத்தினால் மட்டில் அது கடனை வசூல் செய்வதற்காகப் போடப்படும் தாவா ஆகாது. அதாவது நிலம் சுவாதீனம் கிடைக்கவும் வருமானம் Mesne Profits கேட்கவும் தாவா செய்யத் தடை இல்லை. (செக்ஷன் 3)

## ஏற்கனவே போடப்பட்ட நடவடிக்கைகள் மேல் நடத்தப்படமாட்டாது.

இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே விவசாயிகள் மீது மேலே கண்ட கடன் விஷயமாகப் போடப்பட்ட தாவாக்களும் நிறைவேற்று மனுக்களும் இச்சட்டத் தேதியிலிருந்து ஒரு வருடம் வரை மேல் நடத்தப்படாமல் அப்படியே நிறுத்தப்பட்டுவிடும். ஆனால் நடவடிக்கைகளைத் திருத்தவோ, கட்சிக் காரர்களைச் சேர்க்கவோ மாற்றவோ, எடுத்து விடவோ போடப்படும் நடவடிக்கைகளை மேல் நடத்த யாதொரு தடையுமில்லை. ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில், அவற்றை வைத்துக் கொள்ளவும் பாதுகாக்கவும், அவசியமாகத் தோன்றும் உத்தரவுகளைச் செய்யவும், சீக்கிரம் வீணாகப் போகக் கூடிய சொத்துக்களையும், பாதுகாப்பில் வைத்துக் கொள்ளுவதால் ஏராளமான செலவு ஆகக்கூடிய சொத்துக்களையும் விற்பனை செய்து விடும்படி உத்தரவு செய்யவும் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் உண்டு.

மேலும் பிரதிவாதிகளோ அல்லது எதிர் மனுதார்களோ தாங்களாகவே கோர்ட்டில் மனுப் போட்டு தாவா அல்லது மனு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டியதில்லை என்று கேட்டுக் கொண்டால் 'ஸ்டே' ரத்து செய்யப்பட்டு, நடவடிக்கைகள் மேலே நடத்தப்படும். இச்சட்டத்தால் அனுகூலமடையும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையில் 1949-ஆம் வருடத்திய சென்னை ரயத்துக்கள் பாதுகாப்புச்சட்டத்திலும் சரி, 1951-ஆம் வருடத்திய மலையாளக் குடிவாரச் சட்டத்திலும் சரி, இச் சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக இருக்கும் எந்த ஷரத்தும் செல்லாது. (செக்ஷன் 4.)

## காலாவதி கெடுவும் நீடிக்கும்

ஒரு தாவாவுக்கோ நிறைவேற்ற மனுவுக்கோ காலாவதி கெடு கணக்குச் செய்யும் போது இச்சட்டப்படிக்கோ அல்லது இதற்கு முன் இருந்த அவசரச்சட்டப்படிக்கோ மேலே கண்டபடி தடை ஏற்பட்ட காலத்தை நீக்கிக் கணக்குச் செய்யவேண்டும். கடன் வசூல் செய்ய வேண்டியவர் தமக்குக் கிடைக்கவேண்டிய கடன் தொகையை பொறுத்து, தாவா செய்யவோ நிறைவேற்று மனுப்போடவோ இச்சட்டத்தால் தடை ஏற்பட்டு விட்டதென்று உண்மையில் நினைத்துத் தாவா செய்யாமலோ மனுப்போடாமலோ இருந்து விட்டாலும், அவர் அப்படி

இருந்த காலத்தை நீக்கி, காலாவதிக் கெடுவை கணக்குச் செய்யவேண்டும். கடன் கொடுக்க வேண்டியவர் 1951-52, 1952-53 அல்லது 1953-54 வருடங்களில் மேலே கண்டபடி வருமான வரி விதிக்கப்பட்ட காரணத்தினுல் மட்டில் இச்சட்ட ஷரத்துக்களின்படி அனுகூலமடைய லாயக்கில்லாதவர்களாக இருந்தாலும், அவர்கள்மீது தாவா செய்யவும் நிறைவேற்றுமனுக்கள் தாகல் செய்யவும் மேலே கண்டபடி காலாவதி கெடு நீடிக்கும். (செக்ஷன் 5.)

### விவசாயிகள் செய்யும் பராதீனங்களும் செல்லா

இச்சட்டத்தால் அனுகூலமடையும் விவசாயி ஒருவர், இதற்கு முன் அமுலிலிருந்த அவசரச் சட்டத் தேதிக்குப் பிறகு, இச் சட்டம் அமுலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் தம்முடைய சொத்துக்களைப் பராதீனம் செய்திருந்தால், அப்பராதீனம் சம்பந்தமாக பிரச்னை ஏற்பட்டால், அது கடன்காரர்களை மோசம் செய்யவோ, காலதாமதம் செய்யவோ செய்யப்பட்ட பராதீனமாகப் பாவிக்கப்படும். ஆனுல் அப்படி அல்ல என்பதை விவசாயி ருசுப்பிக்கலாம். (செக்ஷன்6)

### விதிகள்

இச்சட்டத்தை அமுல் நடத்தச் சர்க்கார் விதிகள் செய்யலாம். (செக்ஷன் 7.)

### அவசரச் சட்டம் ரத்து

1953-ம் வருடத்திய 5-வது அவசரச் சட்டமானது இச்சட்டத்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (செக்ஷன் 8.)





## சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனு முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிறங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, பூழுக்கடி, எச்சிற்றமும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணு 12.
சிறிய ,, ,, ,, அணு 6.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை S. Ry.

சென்னையில் ஸ்டாக்கிஸ்ட்:—

E. A. N. அப்துல் லத்தீபு அன் கோ

1 & 2, அண்ணு பிள்ளை தெரு, கோத்தவால்சாவடி; :: மதராஸ்–1




# சர்க்கார் அறிக்கைகள்

## சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு (1953)

1948ஆம் வருடத்திய சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவானது ரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இப்புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்புது உத்தரவின்படி மில் ஜவுளி மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும், இரண்டும் நடத்தும் வியாபாரிகளும் கமிஷன் ஏஜண்டுகளும், ஜவுளிமீது கடன் கொடுத்து லேவாதேவி செய்பவர்களும்; சாயம் தோய்க்கப்பட்ட அல்லது பிரிண்ட் செய்யப்பட்ட ஜவுளியில் மட்டில் மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் நடத்துகிறவர்களும், ஒவ்வொரு வகை வியாபாரத்திற்கும், ஒவ்வொரு வியாபார ஸ்தலத்திற்கும் தனித்தனியாக லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும், வருடம் ஒன்றுக்கு லைசென்சுக் கட்டணம் ரூ. 25. சுமை எடுத்துக்கொண்டு தெருவில் போய் விற்பனை செய்யும் 'ஹாக்கர்' களுக்கு லைசென்சுக் கட்டணம் ரூ. 5 எல்லா வித வியாபாரிகளும் ரூ. 100 டிபாசிட் கட்டினால் போதும். அயல் நாட்டு ஜவுளிகளை மட்டில் வியாபாரம் செய்பவர்களும் 'ஹாக்கர்'களும் டிபாசிட் கட்டவேண்டியதில்லை. மேலும் பல வகை வியாபாரம் செய்பவர்களும் ஒரு டிபாசிட் தொகை கட்டினால் போதும்.

## சென்னை நூல் வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு (1953)

1948ஆம் வருடத்திய கட்டுப்பாடு உத்தரவு ரத்துச் செய்யப்பட்டு இப்புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நூல் வியாபாரிகளும் ஒவ்வொரு வியாபார ஸ்தலத்திற்கும் லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும். லைசென்சுக் கட்டணம் ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ. 25 இவர்களும் ரூ. 100 டிபாசிட் கட்டவேண்டும். (30-12-1953 சென்னைச் சர்க்கார் கெஜட்-பாகம் I ரூல் சப்ளிமெண்ட்-164-174.)

## விற்பனை வரி விதி திருத்தம்.

1939ஆம் வருடத்திய சென்னை விற்பனை வரி விதிகளில் விதி 6 (1A) என்று ஒரு புதிய விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது விற்பனை வரிச் சட்டப்படி லைசென்சு பெற்ற வியாபாரி அவ்வருடத்தில் தம்முடைய வியாபார ஸ்தலத்தை வேறு இடத்திற்கு மாற்றினால், அவ்விதம் மாற்றிய தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவர் அவ்விஷயத்தை லைசென்சு கொடுத்த அதிகாரிக்கு அறிவிக்கவேண்டும். லைசென்சிலும் வியாபார ஸ்தலத்தைத் திருத்திக் கொள்ளவேண்டும். இதற்குத் தனிக் கட்டணம் ஒன்றும் கிடையாது.

(20-1-1954 சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் I பக்கம் 15.)

## கிராமப் பஞ்சாயத்து விதிகள்

### சுகாதார - குழந்தை வாரக் கொண்டாட்டச் செலவுகள்.

சென்னை 1950ஆம் வருடத்திய கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 51, செக்ஷன் 112 (1) இவைகளில் கண்ட அதிகாரங்களை உபயோகித்துச் சென்னைச் சர்க்கார், கீழே கண்டபடி ஒரு விதி இயற்றி இருக்கின்றனர். அதாவது:—எந்த வருடத்திலும் சுகாதாரக் குழந்தை வாரக் கொண்டாட்டத்திற்காக (Health and Baby week Celebrations) பிரதேச இன்ஸ்பெக்டரின் முன் அனுமதியின்றி எந்தப் பஞ்சாயத்தும் மொத்தம் ரூ. 20க்கு மேற்பட்ட நேரடிச் செலவுகள் செய்யக்கூடாது,

G. O. 2358—20-1-1954 சென்னைச் சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் I A பக்கம் 7.)

சென்ற இதழ் தொடர்ச்சி.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 182728. சென்னை-

# தொழிலாளர் பகுதி

# தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

## மூன்று மாதங்களுக்குள், அனுமதி மனுவின்பேரில், எவ்வித உத்தரவும் செய்யப்படாவிட்டால், அனுமதி கொடுக்கப்பட்டதாகவே பாவிக்கப்படும்,

செக்ஷன் 6 (2)

இச்சட்டப்படிக்கும், விதிகளின்படிக்கும், சரியான பிளான் முதலிய விவரங்களுடன் ஒரு தொழிற் சாலையை அமைக்கவோ, கட்டவோ, விஸ்தரிக்கவோ, அனுமதி கோரும் மனுவை ரிஜிஸ்டர் தபால் மூலம் சர்க்கார் அல்லது சீப் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி, அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மனுதாருக்கு எவ்வித உத்தரவும் தெரிவிக்கப்படாவிட்டால்-மனுவில் கேட்டிருக்கும் அனுமதி கொடுக்கப்பட்டதாகவே பாவிக்கப்படும்.

## அப்பீல்

செக்ஷன் 6 (3)

ஒரு தொழிற்சாலையை அமைக்கவோ, கட்டவோ, விஸ்தரிக்கவோ, அதைப் பதிவு செய்யவோ, அதற்கு லைசென்சு கொடுக்கவோ சீப் இன்ஸ்பெக்டர் மறுத்தால் அவருடைய உத்தரவின் பேரில் ராஜ்ய சர்க்காருக்கும்; ராஜ்ய சர்க்கார் மறுத்தால் அவர்களுடைய உத்தரவின் பேரில் மத்திய சர்க்காருக்கும் அப்பீல் செய்யலாம். மறுப்பு உத்தரவுத் தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் அப்பீல் கொடுக்கவேண்டும். 'விஸ்தரிப்பு' (Extension) என்பதில்—ஒரு யந்திரத்திற்குப் பதிலாக வேறு யந்திரம் மாற்றுவது சேர்ந்ததல்ல. புதிய யந்திரங்கள் போடுவதுபற்றியும் எந்த எந்தப் புது யந்திரங்கள் சேர்த்தால் அது 'விஸ்தரிப்பு' ஆகாதென்று விதிகள் ஏற்படுத்தலாம். மேற்கண்ட அதிகாரத்தை உபயோகித்து ஒரு தொழிற்சாலையை அமைப்பது, கட்டுவது, விஸ்தரிப்பது, அதைப் பதிவு செய்வது, அதற்கு லைசென்சு வாங்குவது பற்றிய விதிகள் பின்வருமாறு:—

## ஒரு தொழிற்சாலைக் கட்டடம், விஸ்தரிப்பு இவைகளை ஆரம்பிக்கு முன், அனுமதி மனுப்போட வேண்டும்.

விதிகள் 3-11

இச்சட்டம் அமுலுக்கு வந்தபின், ஒரு தொழிற்சாலைக் கட்டடம் கட்டவோ, புதுப்பிக்கவோ, விஸ்தரிக்கவோ, அக்கட்டடங்களில் உற்பத்தி வேலை ஆரம்பிக்கவோ, அதைத் தொழிற்சாலையாக உபயோகிக்கவோ முன்னதாகவே ராஜ்ய சர்க்கார் அல்லது சீப் இன்ஸ்பெக்டருடைய எழுத்து மூலமான அனுமதி வேண்டும்.

மேற்கண்ட விஷயங்களுக்காக அனுமதி கோரும் மனு விதிகளின் நமூனா Iல் இருக்கவேண்டும். நமூனாவில் கேட்கப்படும் விஷயங்களைச் சரிவர எழுதவதுடன் அனுமதி மனுவுடன் கீழேகண்ட தஸ்தவேஜுகளையும் அனுப்பவேண்டும். அவையாவன:—(1) உற்பத்தி வேலையின் 'புளோசார்ட்' (FIowchart) எனப்படும் சித்திர வர்ணனை ஒன்றும், அவ்வேலையின் பல கட்டங்களைப் பற்றிய சுருக்கமான வர்ணனையும் அனுப்பவேண்டும். (2) 'பிளான்'கள் அனுப்பவேண்டும். தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டிய இடம், பக்கத்திலிருக்கும் இடங்கள், கட்டடங்கள், ரோடுகள், சாக்கடைகள் இவைகளைக் காட்டும் பிளான் ஒன்று; அந்த இடத்தில் கட்டப்போகும் கட்டடங்கள், இயற்கை வெளிச்சம் வரக்கூடிய இடங்கள், காற்று வரக்கூடிய இடங்கள், நெருப்பு பிடித்தால் தப்பி ஓடவேண்டிய பாதைகள், யந்திரங்கள் அமைக்கப்படும் இடங்கள், நடைபாதைகள் இவைகளைக் காண்பிக்கக்கூடிய ஒரு 'பிளான்' (Plan Elevation and necessary cross sections) ஒன்று; இவ்விரண்டு பிளான்களுக்கும். ஒவ்வொன்றுக்கும் 3 பிரதிகள் அனுப்பவேண்டும். 'பிளான்' அடிக்கோல் கணக்காக வரையப்பட்டிருக்கவேண்டும்.

(3) பிளான்களையும் தொழிற்சாலைக் கட்டடங்கள், விஸ்தரிப்புக்கள் இவைகளின் அமைப்பையும் முன்கூட்டியே சென்னை டவுன் பிளானில் டைரெக்டர் (Director of Town Planning, Madras) என்ற அதிகாரிக்கு அனுப்பி அவர் இவைகளை அங்கீகாரம் செய்த 'சர்டிபிகேட்' என்ற அங்கீகாரத்தாளையும் சேர்த்து மனுவுடன் அனுப்பவேண்டும்.

(4) மேலும் சீப் இன்ஸ்பெக்டர் கேட்கும் மற்ற விவரங்களும் அனுப்பவேண்டும்.

இவைகளைப் பரிசீலனை செய்து, இவைகள் எல்லாம் சட்டப்படி இருந்தால், சீப் இன்ஸ்பெக்டர் தம் அனுமதியைக் கொடுப்பார். பிளானில் ஒரு பிரதியில் தம் அங்கீகாரத்தை எழுதி, அதில் தம் கையெழுத்திட்டு மனுச் செய்தவருக்கு அனுப்புவார். இவ்விதம் அங்கீகாரம் செய்வதில் யுக்தமான நிபந்தனைகளைச் சேர்க்க, சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. அனுமதி கொடுக்குமுன் தேவையான மற்ற விவரங்களையும் மனுதாரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள அவருக்கு உரிமை உண்டு. தொழிற்சாலையைக் கட்டவோ விஸ்தரிக்கவோ, புதுப்பிக்கவோ அனுமதி கிடைத்தவுடன் அவ்வேலைகளைச் செய்து முடித்துக் கொள்ளலாம். ஆனால் அதில் உற்பத்தி வேலை ஆரம்பிக்குமுன் "லைசென்சு" வாங்கிக் கொள்ளவேண்டும்.

## "லைசென்சு" வாங்கிய பிறகுதான் தொழிற்சாலையில் வேலை ஆரம்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒவ்வொரு வருடமும் சீப் இன்ஸ்பெக்டரிடம் "லைசென்சு" வாங்கிக் கொள்ளவேண்டும். புதிதாகத் தொழிற்சாலை ஆரம்பிக்கிறவர்கள் தங்கள் தொழிற்சாலையைப் பதிவு (Register) செய்து கொண்டு அதற்கு 'லைசென்சு' கொடுக்கவேண்டுமென்று மனுப்போட வேண்டும். 'லைசென்சு' கட்டணம் கட்டிய பிறகுதான் 'லைசென்சு' கிடைக்கும். எந்தத் தேதியில் 'லைசென்சு' கொடுக்கப்பட்டாலும், அது அந்த வருடம் டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரையில் தான் அமுலில் இருக்கும். அடுத்த வருடத்திற்கு மறுபடியும் அதே விதம் லைசென்சு கட்டணம் கட்டி லைசென்சை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். லைசென்சில்லாமல் ஒரு தொழிற்சாலையில் எவ்வித உற்பத்தி வேலையும் செய்யக்கூடாது.

## 'லைசென்சு' வாங்குவதும் 'லைசென்சை' புதுப்பித்துக் கொள்வதும் எப்படி?

விதிகள் 4, 5, 7,

தொழிற்சாலையின் 'ஆட்சியாளர்'(Occupier) அத்தொழிற்சாலையைப் பதிவு (Register) செய்து கொண்டு 'லைசென்சு' கொடுக்க வேண்டுமென்று நமூனா 2ன் படி சீப் இன்ஸ்பெக்டருக்கு ஒரு மனுப் போடவேண்டும். ஏற்கனவே 'லைசென்சு' பெற்றிருந்தாலும் அது அந்த வருடம் டிசம்பர் மாதம் 31 தேதி வரையில் தான் அமுலில் இருக்கும். அடுத்த வருடத்திற்கு 'லைசென்சை' புதுப்பிக்க வேண்டுமென்று லைசென்சு கெடு முடிவதற்கு 2 மாதங்கள் முன்பே மனுக் கொடுக்க வேண்டும். லைசென்சைப் புதுப்பிக்கும் மனுவும் நமூனா 2-ன் படிதான் இருக்கவேண்டும். நமூனா 2 உடன் எப்பொழுதும் நமூனா 3 ன் படி 'வேலை ஆரம்ப அறிவிப்பு' (Notice of Occupation) என்ற நோட்டீசையும் ஆட்சியாளர் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். முதல் தடவையாக லைசென்சு வாங்கவோ, புதுப்பிக்கவோ, நமூனா 2, நமூனா 3 இவைகளின் படி அனுப்பும் மனுவுடன் அத்தொழிற்சாலைக்குரிய 'லைசென்சு' கட்டணத்தையும் சர்க்கார் கஜானாவில் கட்டி அந்த ரசீதையும் அம்மனுவுடன் அனுப்பவேண்டும். 'லைசென்சு' கட்டணம் என்பது அத்தொழிற்சாலையில் உபயோகிக்கப்படும் விசையின் அளவையும், அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் பொறுத்திருக்கின்றது. லைசென்சைப் புதுப்பிக்க வேண்டுமென்ற மனு மேற்கண்ட கெடுவுக்குள் கொடுக்கப்படாமல் தாமதமாகக் கொடுத்தால் 'லைசென்சு' கட்டணத்துடன் இன்னும் ஒரு கால் பங்கு (25%) அதிகக் கட்டணம் கட்டவேண்டும்.

## லைசென்சு கட்டணம் எவ்வளவு?

| தொழிற்சாலையில் அமைக்கப்பட்ட விசையின் குதிரை சக்தி (ஹார்ஸ் பவர்) கீழே கண்ட அளவுக்குள் இருந்தால் | ஒரு வருடத்தில் எந்த ஒரு தினத்திலாவது அதிகப்படியாக வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை கீழே கண்டபடி இருந்தால் அதற்கான கட்டணம். தொழிலாளர் 20 | தொழிலாளர் 50 | தொழிலாளர் 100 | தொழிலாளர் 250 | தொழிலாளர் 500 | தொழிலாளர் 750 | தொழிலாளர் 1000 அதற்கு மேலும் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| விசை இல்லை-லைசென்சு கட்டணம் ரூ. | 10 | 25 | 50 | 120 | 250 | 375 | 500 |
| 10 ஹார்ஸ் பவர் ரூ. | 25 | 50 | 60 | 150 | 300 | 450 | 600 |
| 50 " ரூ. | 50 | 75 | 100 | 250 | 500 | 750 | 1,000 |
| 100 " ரூ. | 100 | 125 | 150 | 375 | 750 | 1125 | 1500 |
| 100 க்கு மேல் ஹார்ஸ் பவர் ரூ. | 150 | 200 | 250 | 500 | 1000 | 1500 | 2000 |

சீப்இன்ஸ்பெக்டருடைய 'லைசென்சு' இல்லாமல் எவரும் தொழிற்சாலையில் எந்த உற்பத்தி வேலையும் செய்யக்கூடாது. பதிவு செய்யவும் லைசென்சுக்காகவும் ஒருவர் தபால் மூலம் சீப் இன்ஸ்பெக்டருக்கு மனு அனுப்பிய தேதி முதல் 3 மாதத்திற்குள் எவ்வித உத்தரவும் கிடைக்காவிட்டால் மனுவில் கேட்டபடி லைசென்சு கொடுக்கப்பட்டதாகவே, பாவிக்கப்படும்.

### 'லைசென்சை' திருத்திக்கொள்வது எப்படி?

விதி 6

'லைசென்சு' வாங்கிய பிறகு ஒரு தொழிற்சாலையிலிருக்கும் யந்திரங்களின் சக்தி அளவு (ஹார்ஸ் பவர்) உயர்த்தப்பட்டாலும், அல்லது அதிகத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்டாலும் "லைசென்சை" திருத்திக் கொள்ளலாம். எவ்விதம் திருத்திக்கொள்ள வேண்டுமென்று விவரம் கண்டு, குறைந்தது 15 நாட்களுக்கு முன்னதாகவே சீப் இன்ஸ்பெக்டருக்கு மனுப்போட வேண்டும். ஏற்கனவே லைசென்சு வாங்கக் கட்டிய கட்டணத்தைவிட அதிகக் கட்டணம் கட்ட வேண்டியிருந்தால், அந்த அதிகக் கட்டணத்தையும், அத்துடன் திருத்தக் கட்டணம் ரூ 5.ம் சேர்ந்து முன் சொன்னபடி சர்க்கார் கஜானாவில் கட்டி திருத்த மனுவுடன் அனுப்பவேண்டும்.

### 'லைசென்சை' வேறு ஒருவருக்கு மாற்றினால்.

விதி 8

ஒருவர் வாங்கிய 'லைசென்சை' எக்காரணத்தாலோ வேறு ஒருவருக்கு மாற்றவேண்டுமென்றாலும் அதற்காகவும் சீப் இன்ஸ்பெக்டருக்கு அனுமதி மனுப் போடவேண்டும். அத்துடன் ரூ. 5 கட்டணம் கட்டி ரசீதையும் மனுவுடன் அனுப்பவேண்டும். இவ்விதம் மாற்றுவதை, சீப் இன்ஸ்பெக்டர் அங்கீகாரம் செய்தால் லைசென்சிலேயே அவருடைய அங்கீகாரத்தை எழுதி அதில் கையெழுத்திடுவார்.

### 'லைசென்சு' வாங்கியவர் இறந்தாலும், இன்ஸால்வெண்டானாலும்

லைசென்சு வாங்கியவர் இறந்துபோனால் தொழிற்சாலையை நடத்தும் வார்சுகளும் சரி; லைசென்சு வாங்கியவர் இன்ஸால்வெண்டானால் அவருடைய தொழிலை நடத்தும் ரிசீவர் முதலியவர்களும் சரி, சீப்இன்ஸ்பெக்டருக்கு மனுப்போட்டு அதே லைசென்சைத் தம் பெயருக்கு மாற்றித் திருத்திக் கொடுக்கும்படி கேட்க வேண்டும். இம்மனுவுக்கும் கட்டணம் ரூ. 5 இதைக் கஜானாவில் செலுத்தி மனுவுடன் ரசீதைதையும் அனுப்பவேண்டும். இவ்விதம் தாமதமின்றி மனுப்போட்டு லைசென்சைத் திருத்தி வாங்கத்தேவையான காலம் வரையில் அவ் வார்சுகளோ, ரிசிவரோ அத்தொழிற்சாலையை நடத்துவது குற்றமாகாது.

### 'லைசென்சு' கெட்டுப்போனால்

லைசென்சு கெட்டுப் போய்விட்டாலும், சேதமாகிவிட்டாலும் ரூ. 5 கட்டணம் கட்டி ஒரு 'டியூப்ளிகேட்' நகல் லைசென்சு வாங்கிக் கொள்ளலாம்.

### லைசென்சு கொடுப்பதும் மறுதலிப்பதும்.

ஒரு தொழிற்சாலையைப் பதிவுசெய்து கொள்ளவும், கொடுக்கவும், லைசென்சில் நிபந்தனைகள் போடவும், பதிவுசெய்து கொள்ளவும் லைசென்சு கொடுக்கவும் மறுக்கவும் சீப் இன்ஸ்

பெக்டருக்கு அதிகாரமுண்டு. மறுதலித்தால் அதற்குக் காரணம் சொல்லவேண்டிய கடமை இல்லை. ஒரு தடவை கொடுக்கப்பட்ட லைசென்ஸை ஸஸ்பெண்டு செய்யவும் சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு.

## 'ஆட்சியாளர்' (Occupier) கொடுக்க வேண்டிய நோட்டீஸ்கள்

செக்ஷன் 7

(1) எந்த இடத்திலும் ஒரு 'தொழிற்சாலை' நடத்தவோ, அந்த இடத்தை ஒரு 'தொழிற்சாலையா'க உபயோகிக்கவோ ஆரம்பிப்பதற்குக் குறைந்தது 15 தினங்களுக்குமுன்பே, அதன் 'ஆட்சியாளர்' (Occupier) கீழேகண்ட விவரங்கள் அடங்கிய நோட்டீஸ் ஒன்றை ரூலு 3ன்படி சீப் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும்:—அந்த நோட்டீசில் இருக்கவேண்டிய விவரங்கள்:—(a) தொழிற்சாலையின் பெயரும் இருப்பிடமும் (b) ஆட்சியாளருடைய பெயரும் விலாசமும் (c) அந்தத் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வரையில் கடிதப் போக்குவரத்துகளை எந்த விலாசத்திற்கு அனுப்பவேண்டும் என்பதையும் (d) இச்சட்டம் அமுலுக்கு வந்தபோது இருந்த தொழிற்சாலைகளில் முந்திய 12 மாதங்களில் என்ன உற்பத்தி வேலை நடத்தப்பட்டதென்று தெரிவிப்பதுடன்; எல்லாத் தொழிற்சாலைகளும் அடுத்த 12 மாதங்களில் என்ன உற்பத்தி வேலை நடத்தப்படுமென்பதையும் தெரிவிக்கவேண்டும் (e) அங்கே உபயோகப்படுத்தவேண்டிய விசை எத்தகையுள்ளதென்றும், எந்த அளவுக்கு விசை உபயோகப்படுத்தப்படுமென்றும் (f) இச்சட்ட விஷயங்களுக்காக அத்தொழிற்சாலைக்கு யார் 'மானேஜர்' என்றும் (g) அத்தொழிற்சாலையில் அமர்த்திக்கொள்ளக் கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை (h) இச்சட்டம் அமுலுக்கு வந்தபோது இருந்த தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரையில், முந்திய 12 மாதங்களில் சராசரியாகத் தினசரி எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்தார்கள் என்பதும் (i) மற்றும் விதிகளால் நிர்ணயம் செய்யப்படும் விவரங்களும், அந்த நோட்டீசில் இருக்க வேண்டும். இதற்கு 'நோட்டீஸ் ஆப் ஆகுபேஷன்' என்று பெயர். லைசென்சு புதுப்பிக்கும்போதும் இது அனுப்பப்படவேண்டும்.

(2) இச்சட்டம் அமுலுக்கு வந்ததால் புதிதாக, 'தொழிற்சாலை'களான ஏற்பட்ட எல்லா ஸ்தாபனங்களும் இச்சட்டம் அமுலுக்கு வந்த 30 நாட்களுக்குள் மேற்கண்ட விவரங்களை, சீப் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

(3) சாதாரணமாய் ஒரு வருடத்தில் 180 நாட்களுக்குக் குறைவாகவே உற்பத்தி வேலையில் ஈடுபடும் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வரையில் அதில் மறுபடியும் வேலை ஆரம்பித்த 30 நாட்களுக்குள் அதன் ஆட்சியாளர் மேலே கண்ட விவரங்கள் அடங்கிய (அதாவது செக்ஷன் 7 (1)ல் கண்டபடிக்குள்ள ஒரு நோட்டீசை, சீப் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும்.

(4) ஒரு புது மானேஜர் நியமிக்கப்பட்டால், அவர் வேலை ஒப்புக்கொண்ட 7 நாட்களுக்குள் இதை ஆட்சியாளர் சீப் இன்ஸ்பெக்டருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

(5) ஒரு தொழிற்சாலைக்கு எவரும் மானேஜர் என்ற பதவி வகிக்காத காலங்களிலும், மானேஜர் என்று பதவி வகிப்பவர் தொழிற்சாலையை நிர்வாகம் செய்யாத காலத்திலும், யார் அந்த மானேஜருடைய வேலைகளைச் செய்து வருகின்றாரோ அவரே இச்சட்டப்படிக்கான 'மானேஜரா'கப் பாவிக்கப்படுவார். அப்படியும் எவரும் இல்லாவிட்டால் அத்தொழிற்சாலையின் ஆட்சியாளரே 'மானேஜ'ராகப் பாவிக்கப்படுவார்.

விதி 12 A

விதி 3ன்படி சீப் இன்ஸ்பெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட பிளான்களும், விதி 5-ன்படி கொடுக்கப்பட்ட லைசென்சும் தொழிற்சாலையில் இன்ஸ்பெக்டர்களாலும், அடிஷனல் இன்ஸ்பெக்டர்களாலும் பார்வையிடும்படி தயாராக வைக்கப்பட்டிருக்கவேண்டும். சீப் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பப்படும் 'பிளான்கள் ராஜ்ய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களை உடைய 'டிராப்ட்ஸ்மென்'—ஆல் தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். தவிர இன்ஸ்பெக்டருக்குத் தொழிற்சாலைக்காரர்களால் அந்தத் தொழிற்சாலையானது தொழில் நடத்த லாயக்காகக் கட்டப்பட்டிருக்கிறதென்று ஒரு சர்டிபிகேட் (Certificate of Stability) அனுப்பப்படவேண்டும். இது ரூலுப்படி இருக்க வேண்டும். (5-8-1953 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் 1 ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 271 பார்க்கவும்) இந்தச் சர்டிபிகேட்டில் அவ்விதியில் கண்ட யோக்கியதாம்சமுள்ள ஒரு இன்ஜினியர் கையெழுத்துப் போடவேண்டும்.

## அதிகாரிகள்

செக்ஷன் 8

தொழிற்சாலைச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக ராஜ்யம் பூராவும் அதிகாரமுள்ள 'சீப் இன்ஸ்பெக்டர்' என்ற பிரதான இன்ஸ்பெக்டர் ஒருவரையும் அவருக்குக் கீழே குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டும் அதிகார முள்ள இன்ஸ்பெக்டர்களையும் (பாக்டரி இன்ஸ்பெக்டர்) நியமிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

ஒரு தொழிற்சாலையிலோ அல்லது தொழில் முறையிலோ, அல்லது அங்கு நடக்கும் வியாபாரத்திலோ, அல்லது அது சம்பந்தமான யந்திரங்களிலோ, யந்திர உரிமைகளிலோ (Patent) நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ எவ்விதமான பாத்தியமும் உள்ளவர்கள் சீப் இன்ஸ்பெக்டராகவாவது, பாக்டரி இன்ஸ்பெக்டர்களாகவாவது நியமிக்கப்படமாட்டார்கள். ஏற்கனவே இவ்வேலைகளுக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கும் மேற்கண்ட பாத்தியங்கள் ஏதாவது இருந்தால் அவர்கள் அப்பதவியை வகிக்க யோக்கியதை யற்றவர்களாவார்கள்.

இச்சட்டத்தில் 'இன்ஸ்பெக்டர்' என்ற அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் எல்லாம், சீப்இன்ஸ்பெக்டருக்கும், ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும், சர்க்காரால் அடிஷனல் இன்ஸ்பெக்டர்கள் என்று குறிப்பிடப்படும் வேறு அதிகாரிகளுக்கும் உண்டு. ஜில்லா மாஜிஸ்ட்ரேட்களுக்கும் அடிஷனல் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்படும் வேறு உத்தியோகம் வகிப்பவர்களுக்கும் சில விஷயங்களில் தான் அதிகாரம் உண்டு. 'இன்ஸ்பெக்டரின் அதிகாரங்கள்' என்ற தலைப்பில் பார்க்கவும்.

## இன்ஸ்பெக்டரின் அதிகாரங்கள்

அந்தந்தப் பாக்டரி இன்ஸ்பெக்டருடைய அதிகார எல்லைக்குள் அவருக்குக் கீழேகண்ட அதிகாரங்கள் உண்டு:— (1) தொழிற்சாலைகளுக்குள் அவர் நுழைந்து பார்க்கலாம். ஒரு இடம் தொழிற்சாலையாக உபயோகப் படுத்தப்படுவதாகச் சந்தேகிக்கக் காரணமிருந்தால் அங்கும் அவர் நுழையலாம்.

செக்ஷன் 9 விதி 13

தம்முடன் வேறு சர்க்கார் உத்தியோகஸ்தர்களையோ ஸ்தலஸ்தாபன அதிகாரிகளையோ, பொது அதிகாரிகளையோ அங்கே கூட உதவிக்கு அழைத்துப் போகவும் இன்ஸ்பெக்டருக்கு உரிமை உண்டு. (2) அங்கே இடங்களையும், யந்திரங்களையும் சோதனை செய்யலாம்; அத் தொழிற்சாலையின் சட்டப்படி வைத்துக் கொள்ளப்படவேண்டிய ரிஜிஸ்டர்களையும் தஸ்தாவேஜுகளையும் தாகல் செய்யும்படி கேட்கலாம்; இச்சட்டத்தை அமுல் நடத்த அவசியமாகத் தோன்றும் வாக்கு மூலங்களை அங்கேயோ வேறு இடத்திலோ எழுதி வாங்குக் கொள்ளலாம். (3) ஒரு தொழிலாளரைப் போட்டோ எடுத்துக் கொள்ளலாம்; கட்டடங்கள் அறைகள் யந்திரங்கள், யந்திரசாதனங்கள், ரிஜிஸ்டர்கள், தஸ்தாவேஜுகள், அல்லது தொழிலாளர்களின் ஆரோக்கியத்திற்காகவும், பந்தோபஸ்துக்காகவும் செய்யப்படவேண்டிய விஷயங்கள்-இவைகளைச் சோதனை செய்யவும், பரீட்சை செய்யவும், அளக்கவும், நகல், போட்டோ, பிளான் முதலிய எடுத்துக்கொள்ளவும், இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. (4) இன்ஸ்பெக்டர், ஒரு டாக்டராக இருக்க யோக்கியதாம்சங்கள் உள்ளவராக இருந்தால், இச்சட்டப்படி செய்யக் கூடிய வைத்திய சோதனையும் செய்ய அவருக்கு உரிமை உண்டு. (5) இச்சட்டப்படி போடக் கூடிய வழக்குகளைப் போடவும் நடத்தவும், எதிர்வாதம் செய்யவும் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும், அடிஷனல் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்படும் வேறு சர்க்கார் உத்தியோகம் வகிப்பவர்களுக்கும் மேலே பாக்டரி 'இன்ஸ்பெக்டர்' களுக்குள்ள எல்லா


டிரேட் மார்க் ரிஜிஸ்டர் எச்சரிக்கை




மேலேகண்டுள்ள டிரேட்மார்க் கவர்ண்மெண்டாரால் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த டிரேட்மார்க் நெ. 152070

மதுரை ஆறுமுகவிலாஸ் சீயக்காய் பவுடர் கம்பெனி புரோப்ரைட்டர் A. சின்னக்கனி நாடார் அவர்களின் சொந்த உரிமையாகும். ஷை டிரேட்மார்க் அகில இந்திய அடிப்படையில் ரிஜிஸ்டர் செய்து சர்ட்டிபிகேட்டும் பெற்றிருப்பதால் இந்த டிரேட் மார்க் டிசைனைப்போல் யாரேனும் பெருக்கியோ, குறுக்கியோ இன்னும் மற்ற விதங்களிலோ கலரபிள் இமிட்டேஷன் செய்யவோ அல்லது மேற்படியாரின் உரிமைகளை மேற்படி டிரேட்மார்க் மூலம் மீறினாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப் படும். என்பதை இதன் மூலம் பொது ஜனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் எச்சரிக்கை செய்யப் படுகிறது.

A. சின்னக்கனி நாடார்.
புரொப்ரைட்டர்.

ஆறுமுக விலாஸ்
சீயக்காய் பவுடர் கம்பெனி
டோர் நெ. 7 நெம்பர் 1
போலீஸ் ஸ்டேஷன் சந்து
மதுரை

INSERTED BY:
ஜ. ஸி. ஏஜன்ஸி மதுரை

அதிகாரங்களும் கிடையாது. அவர்களுக்கு ஒரு தொழிற்சாலை சம்பந்தமாகக் கீழேகண்ட விஷயங்களைக் கவனிக்கத்தான் அதிகாரங்கள் உண்டு. அவையாவன:—பரிசுத்தம் (செக்ஷன் 11); ஆள் நெருக்கடி (செக்ஷன் 16); வெளிச்சம் (செக்ஷன் 17); குடிதண்ணீர் (செக்ஷன் 18); கக்கூசுகள் (செக்ஷன் 19); எச்சில் துப்புமிடங்கள் (செக்ஷன் 20); நெருப்பு ஏற்பட்டால் அணைக்க முன் ஜாக்கிரதை (செக்ஷன் 38.) சுகம் (அத்தியாயம் 5.) வயதுவந்தவர்களின் வேலை நேரம் (அத்தியாயம் 6.) சிறுவர்களை வேலையில் அமர்த்துவது (அத்தியாயம் 7.); சம்பளத்துடன் விடுமுறை. (அத்தியாயம் 8); சட்டப்படிக்கான நோட்டீசுகளின் பிரசுரம் (செக்ஷன் 108).


**பசுமார்க்**

**பெருங்காயம்**

ஓனர்ஷிப் டிக்ளரேஷன்

கல்கத்தா ரிஜிஸ்டர் நெ. 3359

டி டிரேட் மார்க்கையோ அதைப்போலவோ மாற்றியோ, பெருக்கியோ குறுக்கியோ இன்னும் இதர விதங்களிலோ உபயோகித்து இமிட்டேஷன் செய்பவர்கள் நஷ்ட ஈட்டிற்கு ஜவாப்தாரியாவார்களென எச்சரிக்கை செய்யப்படுகிறது.

**அ. ஆ. ஆறுமுகச்சாமி நாடார் & கோ.**

சித்திரக்காரத் தெரு. மதுரை.


இவ்விஷயங்களைத் தான் அவர்கள் சோதனை செய்யலாம்.

## டாக்டர்கள்

தொழிற்சாலைச் சட்டத்தில் வைத்திய நிபுணர்களால் அபிப்பிராயம் சொல்லக் கூடிய விஷயங்கள் பல இருக்கின்றன. இதற்காகக் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டிலோ, அல்லது குறிப்பிட்ட வகைத் தொழிற்சாலைகளுக்கு மட்டுமோ அதிகாரமுள்ள வைத்தியர்களை, சர்க்கார் நியமிப்பார்கள்.

செக்ஷன் 10 விதி 14

இவர்களுக்கு 'சர்டிபையிங் சர்ஜன்' (Certifying Surgeons) என்று பெயர். இவர்கள் வைத்திய சாஸ்திரிப்பட்டம் பெற்றவர்களாக இருப்பார்கள். இவ்விதம் நியமிக்கப்பட்டவர்கள், சர்க்காரின் அனுமதி பெற்று, யோக்கியதாம்சமுள்ள வேறு டாக்டர்களையும் தம் வேலைகளைச் செய்யும்படி நியமிக்கலாம். இவ்விதம் நியமிக்கப்பட்ட டாக்டர்களுக்கும் சர்டிபையிங் சர்ஜனுடைய எல்லா அதிகாரங்களையோ, சில அதிகாரங்களையோ, கொடுக்கலாம். இவ்விதம் நியமிக்கப்படும் டாக்டர்கள் அவர்கள் சம்பந்தத் தொழிற்சாலைகளின் ஆட்சியாளர்களாகவோ அவைகளில் எவ்விதப் பாத்தியமுமுள்ளவர்களாகவோ இருக்கக்கூடாது.


(தொடரும்)



*15* ஆண்டுகளாக எங்கும் புகழ்பெற்ற அற்புத சஞ்சீவி

**"ஜெயராம்" காயசுத்தி லேகியம்** (ரிஜிஸ்டர் நெ. 138512)

24 மணி நேரத்தில் ஆச்சரியமான குணம் தெரியும்

ஆயிரக்கணக்கான மக்களால் தினம் உபயோகிக்கப்படுவது.

குடல், இரைப்பை கோளாறுகளுக்கு அற்புத மருந்து.



1 சேர் விலை ரூ. 4-8-0 ½ சேர் விலை ரூ. 2-4-0

**ஜெயராம் பச்சைக்கற்பூர மாத்திரை** சுரம், சளி, மந்தம், வயற்றுப்பிசம், ஊதுகாமாலை, இசிவு, மலபந்தம் முதலியவைகளை நிமிஷக்கணக்கில் குணப்படுத்தும். பாட்டில் விலை 0—12—0

**கஸ்தூரி மாத்திரை.** சுப சம்பந்தமான சுரம், ஜன்னி, நமர், கைகால் ஜில்லிப்பு, தொண்டைக்கட்டு முதலிய வியாதிகளை குணப்படுத்தும். 1 பாட்டில் விலை 1—0—0

**கோரோஜனை மாத்திரை.** தோஷ சுரம், வயிற்று வலி, பொருமல் மாந்தம், சளிக் கட்டிற்கு 1 பாட்டில் விலை 1—0—0

**கட்டுவாதி மாத்திரை.** மாந்தம், அஜீரணம் முதல் சகல விதமான வயிற்றோட்டத்தையும் நிறுத்தும் 1 பாட்டில் விலை 0—8—0

**பெரளி எண்ணெ.** சகல விதமான பெரளி வாயு, தெற்குத்திக்கணை, இசிவு, முக்குக் கணை முதலிய சகலவித ரணத்திற்குச் சிறந்தது. 1 பாட்டில் விலை 1—0—0

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும். வி. பி. பி. தனி

**ப. ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.**

# 'எஸ்டேட்' வரிச் சட்டம்.

## இறந்தவருடைய மொத்த ஆஸ்தியின் மதிப்பு எப்படி கணக்கு செய்யப்படும்?

[எஸ்டேட் வரிச்சட்டம் என்ற 1953-ம் வருடத்திய 34-வது மத்திய சட்டம் 15-10-53ல் அமுலுக்கு வந்தது. அத்தேதிக்குப்பின் இந்தியாவில் இறந்து போகும் நபருடைய மொத்த ஆஸ்தியின் மதிப்பின் பேரில் ஒரு வரி விதிக்கப்படும். இதற்கு 'எஸ்டேட்வரி' அல்லது 'ஆஸ்திவரி' எனப் பெயர். எஸ்டேட் வரிச் சட்டப்படி வரி விதிக்கும் அதிகாரிகள் யார் என்பதைப்பற்றிச் சென்ற மாத இதழில் விளக்கப்பட்டது.]

'எஸ்டேட்' வரிச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 15-10-1953 அல்லது அதற்குப் பின் இறந்துபோகும் நபருடைய மொத்த ஆஸ்தியின் மதிப்பின் பேரில் எஸ்டேட் வரி விதிக்கப்படும். 'ஆஸ்தி' அல்லது சொத்துக்கள் என்பதில் எவை அடங்கும் என்பதை நுட்பமாகப் பின்பு கவனிப்போம். பொதுவாகச் சொல்லுமிடத்து, இறக்கும் காலத்தில் இறந்தவருக்குச் சொந்தமாக இருந்த எல்லா ஸ்தாவர

## வரிகள்

ஜங்கம சொத்துக்களும் வரவேண்டிய தொகைகளும் பணங்களும், விவசாய நிலங்களும், சொத்துப் பாத்தியங்களும் இறந்தவருடைய ஆஸ்தியாகப் பாவிக்கப்படும். இந்தச் சொத்துக்களின் சொந்தக்காரர் இறக்கும் காலத்தில் இவைகளுக்கு என்ன காலக்கிரயமோ (Market Value) அதுதான் சொத்தின் மதிப்பாகும். (செக்ஷன் 36.)

ஆனால் இறந்தவர் உண்மையில் கொடுக்க வேண்டிய கடன் தொகைகளையும், இறந்தவருடைய சொத்தின் மீதுள்ள அடமானம் போன்ற வில்லங்கங்களின் தொகைகளையும்; இறந்தவருடைய ஈமச் சடங்களுக்குத் தேவையான செலவு தொகைகளையும் (இது ரூ. 1000-க்கு மேற்படாது.) நீக்கியே இறந்தவருடைய மொத்த ஆஸ்தியின் மதிப்பானது நிர்ணயம் செய்யப்படும். (செக்ஷன் 44.)

இறந்தவருடைய மொத்த சொத்துக்களைக் கணக்குச் செய்வதில் கீழே கண்ட இனங்களைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டியதில்லை (செக்ஷன் 34.) அவையாவன:—(1) ரூ. 2500 வரை மதிப்புள்ள வீட்டுச் சாமான்கள்—இறந்தவர் தம்முடைய ஜீவனத்தை நடத்துவதற்கு அவசியமாக இருந்த தொழிலாளர் ஆயுதங்கள் விவசாயக் கருவிகள் முதலியவை உள்பட. (2) விற்பனைக்காக உத்தேசிக்கப்படாத புத்தகங்கள் (3) ஆடைகள்—(ஆனால் ஆடைகளில் பதித்து தைக்கப்பட்டிருக்கும் வைரம் சிகப்பு போன்ற ரத்தினங்களும் ஆபரணங்களும் நீங்கலாக) (4) இறந்தவருடைய குடும்பத்திற்குச் சொந்தமானதும் தேசிய, அல்லது விஞ்ஞான அல்லது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சித்திரங்கள், அச்சுக்கள், சுவடிகள் முதலியவை. ஆனால் இவை சர்க்காருக்கோ, சர்வகலாசாலைகளுக்கோ அல்லது வேறு பொது ஸ்தாபனத்திற்கோ கொடுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அல்லது மத்திய ரிவின்யூ போர்டார் ஏற்படுத்தும் நிபந்தனைகளின்படி விநியோகம் செய்யப்படவேண்டியதாக இருக்கவேண்டும்.

மேலே கண்ட இனங்களை நீக்கி இறந்தவருடைய பாக்கி ஆஸ்தியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மேல்கண்ட விதம் இறந்தவருடைய மொத்த ஆஸ்தி என்ன என்று கணக்குச் செய்வதில் வரிவிதிக்கப்படாத சில சொத்துக்களையும் சேர்த்துக் கூட்டிக்கொண்டுதான் கணக்குச் செய்யப்படும். அதாவது சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் விவசாய நிலங்களுக்கு எஸ்டேட் வரி கிடையாது. ஆனால் இறந்தவருக்கு இருந்த விவசாய நிலங்களின் மதிப்பையும் சேர்த்துத்தான் அவருடைய மொத்த ஆஸ்தி நிர்ணயம் செய்யப்படும். ஏனென்றால் எஸ்டேட் வரி விகிதங்கள் எல்லாம் மொத்த ஆஸ்தியின் மதிப்பின் பேரில் விதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே இந்து பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்தவருடைய பாத்தியத்தின் மதிப்பில் ரூ. 50,000 வரையிலும், மற்றவர்களுடைய சொத்து மதிப்பில் ஒரு லக்ஷ ரூபாய் வரையிலும் எஸ்டேட் வரி கிடையாது. இருந்தாலும் அதையும் சேர்த்துத்தான் இறந்தவருடைய மொத்த ஆஸ்தி மதிப்பை முதலில் கணக்குச் செய்துகொள்ள வேண்டும். கீழே கண்ட வேறு சில இனங்களுக்கும் 'எஸ்டேட்' வரி விதிக்கப்படமாட்டாது. ஆனாலும் இவைகளுடைய மதிப்பையும் சேர்த்துத்தான் முதலில் 'மொத்த ஆஸ்தி' கணக்குச் செய்யப்படும்.

அவையாவன :—

(1) இறப்பதற்கு முன் 6 மாதங்களுக்குள் பொதுத் தர்மங்களுக்காக இறந்தவர் செய்த நன்கொடைகள்—ரூ. 2500 மதிப்பு வரையில் (2) இறப்பதற்கு முன் 2 வருடங்களுக்குள் இறந்தவர் வேறு காரியங்களுக்காகக் கொடுத்த நன்கொடைகள் ரூ. 1500 மதிப்பு வரையில் (3) எஸ்டேட் வரி செலுத்துவதற்காகவே செய்துகொண்ட இன்ஷ்யூரன்ஸ் தொகை—மதிப்பு ரூ. 5000 வரையில் (4) எஸ்டேட் வரிக்கென்றே விதிகளின்படி இறந்தவர் சர்க்காரிடம் வைத்திருக்கும் தொகைகள்—மதிப்பு ரூ. 5000 வரையில் (5) தம்முடைய ஜீவனத்திற்கு நம்பி இருந்த ஸ்திரீ உறவினர்களின் பெற்றோர்கள் அல்லது இயற்கை கார்டியன்கள் அவர்களின் கலியாணத்திற்காக என்றேசெய்து கொண்ட இன்ஷ்யூரன்ஸ் தொகைகள் அல்லது செய்து வைத்த டிரஸ்டு அல்லது செட்டில்மெண்டு சொத்துக்கள்—ஒவ்வொரு பெண்ணின் கலியாணத்திற்கும் ரூ. 5000 வரை.

மேலே கண்ட இனங்களை, இறந்தவருடைய மொத்த ஆஸ்திக் கணக்கில் சேர்த்துக்கொண்டாலும் அவைகளுக்கு எஸ்டேட் வரி கிடையாது. இறந்தவருடைய சொத்திலிருந்து அவர் இறந்த தேதி வரையில் கிடைக்கக்கூடிய வருமானமும் ஆஸ்தி மதிப்பில் சேர்த்துக்கொள்ளப்படும்.

இவ்விதம் இறந்தவருடைய மொத்த ஆஸ்தியை முதலில் நிர்ணயம்செய்து அதற்கு எஸ்டேட் வரிச் சட்டத்தில் கண்ட விகிதப்படி எஸ்டேட் வரி எவ்வளவு என்று கணக்குச் செய்யப்படும். பிறகு அந்த மொத்த ஆஸ்தியில் வரி விதிக்கப்படவேண்டிய ஆஸ்தி மதிப்பு என்ன; வரி இல்லாத ஆஸ்தி மதிப்பு என்ன; என்று கணக்குச் செய்யப்படும். மொத்த வரியில் அதே வீதாசாரப்படிக்கான தொகைதான் இறந்தவருடைய சொத்துக்கான 'எஸ்டேட்' வரி ஆகும். (செக்ஷன் 34 (4))

## உதாரணம்

உதாரணமாக இறந்த ஒருவரின் மொத்த ஆஸ்தி மதிப்பு ரூ. 3,00,000 (மூன்று லக்ஷ ரூபாய்) என்று வைத்துக்கொள்ளுவோம். இதற்கு எஸ்டேட் வரிச் சட்டத்தின் இரண்டாவது ஷெடியூலில் கண்டபடி முதல் லக்ஷ ரூபாய்க்கு வரி இல்லை. அடுத்த ரூ. 50,000க்கு வரி 7½% அதாவது ரூ. 3750. அடுத்த ரூ. 50,000க்கு வரி 10% அதாவது ரூ. 5000 அடுத்த ஒரு லக்ஷத்திற்கு 12½% ரூ. 12,500 ஆக மொத்தம் வரி (ரூ. 3050 + 5000 + 12,500=) ரூ. 21,250. ஆனால் இறந்தவருக்குச் சென்னை ராஜ்யத்தில் ரூ. இரண்டு லக்ஷம் பொறுமானமுள்ள விவசாய நிலங்கள் இருக்கின்றன. இந்த நிலங்களின் மதிப்பையும் சேர்த்துத்தான் அவருடைய சொத்து மதிப்பு ரூ. 3 லக்ஷம். ஆனால் சென்னை விவசாய நிலங்களுக்கு எஸ்டேட் வரி கிடையாது, அதாவது அவருடைய மொத்த ஆஸ்தியில் 3ல் 2 பங்குக்கு வரி கிடையாது. 3ல் 1 பங்குக்குத்தான் வரி.

இறந்தவருடைய மொத்த ஆஸ்தியின் வரி ரூ. 21,500ல் 3ல் 1 பாகமாகிய ரூ. 7,166-10-8 தான் இறந்தவருடைய எஸ்டேட்டுக்கு விதிக்கப்படும் எஸ்டேட் வரி ஆகும். இந்த உதாரணத்தில் இருப்பவர் பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல.

குறிப்பு:—எஸ்டேட் வரிச்சட்டத்தின் மற்ற முக்கிய அம்சங்கள் பிந்திய "வக்கீல்" இதழ்களில் விளக்கப்படும்.






உ
ஸ்ரீ மகாலெக்ஷிமி துணை
திருக்காட்டுப்பள்ளியில்
பஸ் ஸ்டாண்டுக்குச் சமீபத்திலுள்ள
திருச்சி கபே
ஹோட்டலில் கை தேர்ந்த
பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்
பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும்
இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும்.
டீ பார்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு
ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை
செய்யப்படும். ஒருமுறை விஜயம்
செய்யவும்.



# வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## இந்துச் சட்டம். இறந்தவருடைய சமாதி கைங்கரியத்திற்காகச் சாசுவத மாகச் சொத்தை எழுதி வைப்பது செல்லாது

[ஆதாரம்:—1953 (2) மதராஸ் லா ஜர்னல் 803 சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.]

உங்களுக்குச் சொந்தமான சொத்தை நீங்கள் உங்களுடைய இஷ்டம் போல் யாருக்கு வேண்டு மானாலும் எவ்விதப் பராதீனமும் செய்யலா மென்ற உரிமை உங்களுக்கு இருந்தாலும், அதற் கும், சட்டத்தால் ஒரு வரம்பு கட்டப்பட்டிருக் கிறது. அதாவது வருங்காலத்தில் உங்களுடைய அச்சொத்தின் உரிமையானது சாசுவத மாக இன்னார் இன்னாரிடம் தான் இருக்க வேண்டு மென்று நிர்ணயம் செய்யச் சட்டமானது உங்க ளுக்கு உரிமை கொடுக்கவில்லை. உங்களுடைய சொத்தின் பாத்தியங்களை ஓர் கால அளவு வரை யில் தான் நீங்கள் நிர்ணயம் செய்யலாம். இரண் டொரு விதிவிலக்குகளுக்குட்பட்டு இது தான் சட்டம்.

இந்தச் சட்ட விதியை ஒரு உதாரணத்தைக் கொண்டு விளக்கலாம். உங்களுடைய சொத்தா னது உங்களுடைய மக்களிடையேயேயும் அம் மக்களுடைய மக்களிடையேயும், இவ்விதம் வம்ச பாரம்பரையாக உங்கள் குடும்பத்திலேயே சாசுவதமாக இருக்க வேண்டு மென்று நீங்கள் அபிப்பிராயப்பட்டால் அவ்வெண்ணத்தை முற்றிலும் நிறை வேற்றச் சட்டம் உங்களுக்கு இடம் கொடுக்காது. இச்சட்ட விதிக்கு 'சாசு வதப் பராதீனத் தடைவிதி' (Rule against Perpetuity) எனப் பெயர். பொதுவாகச் சொல்லுமிடத்து, சொத்தின் சொந்தக்காரர் தம் உரிமைகளை உயிருடனிருப்பவர்களுக்கும் அவர்களுக்கு இனி பிறக்கக் கூடிய மக்களுக்கும் தான் கொடுக்கமுடியும். உயிருடன் இருப்பவர் களுக்குச் சொத்தை அத்தறுதியாகவும் கொடுத்து விடலாம்; ஆயுள் வரை அனுபவிக்கும் பாத்தியத்தை மட்டில் அவர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய ஆயுளுக்குப் பிறகு அவர்க ளுடைய மக்கள் அத்தறுதியாகச் சொத்தை அடையும்படிக்கும் எழுதி வைக்கலாம். அது தான் வரம்பு. அதற்குமேல் தம்முடைய சொத்தை வருங்காலத்தில் யார் யார் எவ்வளவு எவ்வளவு காலம் அனுபவித்து வரவேண்டு மென்று நிர்ணயம் செய்யச் சொத்தின் சொந்தக் காரருக்கு உரிமை இல்லை. 'என்னுடைய சொத் துக்கள் வருங்காலத்தில் எப்பொழுதும் என் னுடைய குடும்பத்திலேயே என்னுடைய பரம் பரைச் சந்ததிகளிடையேயே இருந்துவர வேண்டும்'—என்று ஒருவர் எழுதி வைத்தால் அது செல்லாது. ஏனென்றால் அது ஒரு சாசு வதப் பராதீனமாகும்.

ஆனல் இதற்கு விதிவிலக்குகளுமுண்டு. அதாவது, மத சம்பந்தமாகவோ, கல்வி, வர்த்த கம், சுகாதாரம், போன்ற பொது மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய பொதுத் தர்மங்களுக் காகவோ ஒருவர் தம்முடைய சொத்துக்களை சாசுவதமாகப் பராதீனம் செய்து விடலாம். ஒரு கோயிலுக்கோ, கலாசாலைக்கோ, ஆஸ்பத் திரிக்கோ ஒருவர் தம்முடைய சொத்தைச் சாசு வதமாகக் கொடுத்து விடலாம்.

பிரஸ்தாப வழக்கின் விவரங்களாவன:— கனகசபாபதிப் பிள்ளை என்பவர் 1942-ல் இறந் தார். அவருக்கு ஆண் மகன் இல்லை. மனைவியும் இரண்டு பெண் மக்களும் உண்டு. ஏராளமான சொத்துக்கள் இருந்தன. இந்துச் சட்டப்படி அவருடைய சொத்துக்களை அவருடைய மனைவி கோமதி அம்மாளே வார்சாக அடைந்து அனுப வித்து வந்தாள். கோமதி அம்மாள் 1944ல் இறந்தாள். ஆனல் அவள் இறக்குமுன்

இரண்டு பத்திரங்கள் எழுதி வைத்திருந்தாள். ஒன்று ஒரு கிரயப் பத்திரம். இதன் மூலம் தம்முடைய புருடனுக்குச் சொந்தமாக இருந்து, தான் நடத்தி வந்த மோட்டார் பஸ் தொழிலை தன்னுடைய இளைய மகளின் புருடனுக்கு ரூ. 80,000க்கு விற்பனை செய்தாள். மற்றொரு பத்திரம் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம். இதன் மூலம் ரூ. 27,000 பொறுமானமுள்ள ஸ்தாவர சொத்துக்களை அவள் தன்னுடைய புருடனுடைய சமாதி கைங்கரியத்திற்காக எழுதி வைத்திருந்தாள். அச் சொத்துக்களின் வருமானத்திலிருந்து தன்னுடைய கணவன் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் சமாதிக்கு, தினசரி பூஜை நடத்தப்பட்டு வர வேண்டுமென்றும், ஒவ்வொரு வருடமும் அவருடைய சிராத்த தினமாகிய ஆனிமாதம் திருவோண நக்ஷத்திரத்தன்று தினம் அங்கே குருபூஜையும் அன்னதானமும் நடத்தப்பட வேண்டுமென்றும்; தான் உள்ள வரையில் தானும் தனக்குப்பின் தன்னுடைய இரண்டாவது மகளுடைய புருடனும், அவருக்குப் பிறகு அவருடைய ஆண் சந்ததிகளும் வம்ச பரம்பரையாக இச் சமாதி கைங்கரியத்தை இச் சொத்துக்களின் வருமானத்திலிருந்து நடத்தி வர வேண்டுமென்றும் அச் செட்டில்மெண்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கோமதி அம்மாள் இறந்த பிறகு அவருடைய மூத்த மகள் பாக வியாஜ்யம் தொடர்ந்தாள். தன்னுடைய தாயார் இறந்தபின், தகப்பனுடைய சொத்துக்களுக்குத் தானும் தன்னுடைய சகோதரியும் தான் வார்சுகளென்றும்; தனக்குச் சொத்தில் பாதி பாகம் உண்டென்றும்; அதைப் பிரித்துத் தன்னிடம் சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், தன்னுடைய தாயார் எழுதி வைத்த கிரய சாசனமும் சரி, செட்டில்மெண்ட்டும் சரி செல்லாதெனவும் கண்டு அவள் தாவா தொடர்ந்திருந்தாள்.

கோமதி அம்மாள் எழுதிக் கொடுத்த கிரய சாசனத்திற்குச் சரியான பிரதிப் பிரயோஜனம் இல்லை என்றும், அது இரண்டாவது மருமகனுடைய மோசடியாலும் அமிதச் செல்வாக்கினாலும் ஏற்பட்டதென்றும் ஆகையால் அக் கிரயப்பத்திரம் செல்லாதெனவும் சப்கோர்ட்டில் தீர்ப்பு ஏற்பட்டது. இவ் விஷயம் சென்னை ஹைகோர்ட்டிலும் உறுதி செய்யப்பட்டது. இது விஷயமாக, சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீலும் இல்லை.

கோமதி அம்மாள் சமாதி கைங்கர்யத்திற்காக எழுதிவைத்த செட்டில்மெண்டும் செல்லாதென சப் கோர்ட்டும் ஹைகோர்ட்டும் அபிப்பிராயப் பட்டனர். ஆனால் இது விஷயமாக மட்டில் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. சுப்ரீம் கோர்ட்டாரும் அவ்விதமே அபிப்பிராயப்பட்டனர்.

தர்மத்திற்காகத்தான் சாசுவதமாகச் சொத்துக்களை எழுதிவைக்கலாமே! கோமதி அம்மாள் எழுதி வைத்த செட்டில்மெண்டு ஏன் செல்லவில்லை?

இந்துச் சட்டப்படி, இறந்தவருக்குச் சமாதி கட்டுவதும், அங்கே அது சம்பந்தமாகக் குருபூஜை முதலியவற்றைச் செய்வதும் மத சம்பந்தமாகவும் கருதப்படவில்லை; அது ஒரு தர்மமாகவும் கருதப்படவில்லை. ஆகையால் இறந்த ஒருவருடைய சமாதி கைங்கர்யத்திற்காகச் சாசுவதமாகச் சொத்து எழுதிவைப்பது செல்லாதென சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர். தன் புருடனுடைய சொத்துக்களைத் தன்னுடைய ஆயுள் வரை அனுபவிக்க மட்டில் பாத்தியமுள்ள ஒரு இந்து விதவை இவ்விதம் சொத்துகளைச் செட்டில்மெண்ட் மூலம் தானம் செய்யலாமா என்ற பிரச்னை ஒருபுரமிருக்க, சமாதி கைங்கரியத்திற்காகச் சாசுவதமாகச் சொத்து எழுதி வைப்பதே செல்லாதென இவ்வழக்கில் தீர்ப்பு ஏற்பட்டது. இவ்விதம் சொத்து எழுதி வைப்பவர் அச்சொத்துக்களுக்குப் பூர்ண உரிமை உள்ள ஒரு ஆணாக இருந்தாலும், அது செல்லாது. ஏனென்றால் சொத்துக்களைப்பற்றிச் சாசுவத ஏற்பாடு செய்வதைச் சட்டம் பொதுவாகத் தடுக்கின்றது. இதற்கு விதி விலக்கு இருந்தாலும் சமாதி கைங்கரியமானது இவ் விதிவிலக்குகளில் ஒன்றல்ல. கோமதி அம்மாளின் செட்டில்மெண்டும் செல்லவில்லை. தகப்பன் சொத்தில் சரிபாதியை வாதி அடைந்தாள்.


## கிருஷ்ண விலாஸ்

**சீயக்காய் பவுடர் கம்பெனி**

**336, கீழ மாசி வீதி, மதுரை.**

எங்களிடம் 2066 ஹனுமான் மார்க், 1006 மங்கி மார்க், உதயகிரி கிருஷ்ண விலாஸ் சீயக்காய் பவுடர் பாக்கெட்டுகள் கிடைக்கும். ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

***N. B.* கோல்டன் டீ & காப்பி**

பவுடரை உபயோகியுங்கள்

**மு. ஏகாம்பர செட்டியார்,**
புரோப்ரைட்டர்.




இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுதஇடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

### பஞ்சாயத்துக் கலைக்கப்பட்டால் தலைவருடைய பதவியும் போய்விடுமா?

**17. கேள்வி:** (உமாமகேசுவரன் — ஒரத்தநாடு.) ஒரு மேஜர் பஞ்சாயத்துக்குத் தலைவர், உபதலைவர், மெம்பர்கள் உண்டு. அதற்கு நிர்வாக அதிகாரியும் இருக்கிறார். பஞ்சாயத்தின் நிர்வாகத்தை 'மெஜாரிடி' மெம்பர்கள் தடை செய்கிறார்கள் என்றால், அதன்பேரில் போர்டு கலைக்கப்படுமானால், தலைவர் தொடர்ந்து பதவியில் இருப்பாரா? அல்லது அவரும் நீங்கவேண்டியதுதானா?

**பதில்:** பஞ்சாயத்து சர்க்காரால் கலைக்கப்பட்டாலும் தலைவர் மட்டில் பதவியில் இருப்பார். (பஞ்சாயத்துச் சட்டம்—செக்ஷன் 48 (2)). ஆனால் தலைவரையும் பதவியை விட்டு நீக்க இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் இருக்கிறது. (பஞ்சாயத்துச் சட்டம், செக்ஷன் 47.)

### பஞ்சாயத்துக்கு லைசென்சுக்காகப் போடப்படும் மனுவில் உத்தரவு ஒன்றும் ஏற்படாவிட்டால்.

**18. கேள்வி:** (தீர்த்தமலை — குமரசாமிப் பேட்டை.) ஒரு மேஜர் பஞ்சாயத்து எல்லைக்குள் 10 'ஹார்ஸ்பவர்' உள்ள 'ஆயில் எஞ்சின்' வைக்க ரைஸ்மில்லுக்குப் பிளான் கொடுத்து லைசென்சுக்கு எக்சிகூடிவ் ஆபீசருக்கு மனுப் போட்டால் எவ்வளவு நாளைக்குள் லைசென்ஸ் கொடுப்பார்கள்? வருடக் கணக்கில் அவர்கள் காலதாமதமாக வைத்துக் கொள்ளலாமா?

**பதில்:** லைசென்சுக்காகப் போடப்படும் மனுவின் பேரில், அம்மனுவானது நிர்வாக அதிகாரிக்குக் கிடைத்த 30 நாட்களுக்குள் உத்தரவு ஒன்றும் மனுதாருக்குத் தெரிவிக்கப்படாவிட்டால், லைசென்சு கொடுக்கப்பட்டதாகப் பாவிக்கப்படும். குறிப்பிட்ட வகை லைசென்சுகளுக்கு 30 நாள் என்பதை விதிகள் மூலம் அதிகரிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (பஞ்சாயத்துச் சட்டம். செக்ஷன் 96 (3))

### மதம் மாற்றிய இந்து ஸ்திரீயின் மறுமணம்,

**19. கேள்வி:** (L. 2742) ஒரு இந்துவானவர் ஜாதிமத சம்பிரதாயங்களின்படி ஒரு இந்துப் பெண்ணை மணந்து வாழ்க்கையை நடத்தி வந்தார். சந்ததி இல்லை. இதன் மத்தியில்

அந்த இந்து ஸ்திரீயானவள் இஸ்லாம் மதத்தில் சேர்ந்துகொண்டு சில தினங்களுக்குப் பின்னுல் ஒரு முஸ்லீமை மணந்துகொண்டாளானுல் முதல் இந்துக் கணவர் சட்ட திட்டங்களின்படி எந்த விதமான பரிகாரங்கள் பெறலாம்?

**பதில்:** இந்துக் கணவனுடன் ஏற்பட்ட விவாகம் ரத்துச் செய்யப்படாமலிருக்கும்போது, அந்த ஸ்திரீயானவள் வேறு மதத்தைத் தழுவுவது வேறு ஒருவரை மணம் செய்துகொள்ளுவதும் 'இந்தியன் பீனல்கோடு' என்ற சட்டத்தின் செக்ஷன் 494 படி குற்றமாகும். இதற்கு 7 வருடம் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். இந்துக் கணவர் இது சம்பந்தமாகக் கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். மேலும் சென்னை இந்து பல தாரத் தடைச் சட்டப்படி தமக்கும் தம் மனைவிக்கும் ஏற்பட்ட விவாகத்தை ரத்துச் செய்து கொள்ளவும் மனுப்போடலாம்.

## இஸ்லாமியச் சட்டம்—சொத்தின் வருமானத்தை ஆயுள் வரை அனுபவிக்கலாமென்ற உயில் ஷரத்து செல்லுமா?

20. **கேள்வி:** (P. 2774-ஹனீப்-பள்ளப்பட்டி) (1) முஸ்லீம்கள் உயில் எழுதினுல் செல்லுமா? முஸ்லீம் ஒருவர் சொத்தைக் கிரயம் வாங்கிய தேதி அன்றே, பட்டா தம் பெயருக்கு மாறுவதற்கு முன்பே, உயில் எழுதி வைக்கலாமா? (2) குழந்தை இல்லாத முஸ்லீம் ஒருவர் தம்முடைய ஆயுளுக்குப் பின் தம் சொத்துக்களின் வருமானத்தை மட்டில் தம்முடைய மனைவி அவள் ஆயுள் வரை அனுபவித்து வரவேண்டுமென்றும், மனைவியின் ஆயுளுக்குப்பின் அச் சொத்துக்களின் வருமானத்தைத் தம்முடைய சகோதரர்களும் சகோதரிகளும் அனுபவித்து அவர்களுடைய ஆயுளுக்குப்பின் ஷை யார்களுடைய மக்கள் அனைவரும் அச்சொத்துக்களை தானுதி விக்கிரய பாத்தியத்துடன் அடைய வேண்டியதென்றும் கண்டு ஒரு உயில் எழுதி வைத்தால் அது செல்லுமா?

**பதில்:** (1) முஸ்லீம்கள் 'உயில்' எழுதினுல் செல்லும்; ஆனுல் சில விசேஷ விதிகளுக்குட்பட்டுத்தான் செல்லும். அவ்விதிகளாவன:— உயில் மூலம் வார்சு ஒருவருக்கே சொத்துக்கள் கொடுக்கப்பட்டால், உயில் எழுதி வைத்தவர் இறந்த பிறகு மற்ற வார்சுகள் எல்லோரும் அதை ஒப்புக் கொண்டால் தான் அது செல்லும். எல்லா வார்சுகளும் அதை ஒப்புக் கொள்ளாவிட்டால், ஒப்புக்கொள்ளும் வார்சின் பாகத்தை மட்டில் தான் உயில் கட்டுப்படுத்தும். மேலும் இறந்தவருடைய மையத்துச் செலவுகளும், கடன்களும் நீக்கி, பாக்கி இருக்கும் சொத்தில் மூன்றில் ஒரு பாகத்தைத் தான் முஸ்லீமானவர் 'உயில்' (வசியத்) மூலம் கொடுக்கலாம். அதற்கு மேல் உயில் மூலம் கொடுக்கப்பட்டிருந்தால், உயில் எழுதியவர் இறந்த பிறகு அதற்கு வார்சுகள் எல்லோரும் சம்மதித்தால் தான் அது செல்லும். வார்சுகள் சம்மதிக்காவிட்டால் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கும் நன்கொடைகள் மூன்றில் ஒன்றுக்குள் வரும்விதம் வீதாசாரமாகக் குறையும். (2) சொத்தைத் தாம் கிரயம் வாங்கிய உடனேயே, பட்டா மாருமலிருந்தாலும், உயில் எழுதி வைப்பது, மேற் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, செல்லும். உயிலின்படி சொத்தின் வருமானத்தை அவருடைய மனைவியும், அவளுக்குப்பின், அவருடைய சகோதர சகோதரிகளும் ஆயுள் வரையிலும் அனுபவிக்கலாம். ஆனுல் அவர்கள் இறந்த பிறகு சொத்துக்களை அவர்களுடைய வார்சுகளுக்குக் கொடுத்திருக்கும் ஷரத்து செல்லாது. உயில் எழுதி வைத்தவருடைய வார்சுகளைத்தான் சொத்துச் சேரும். (1948 (2) மதராஸ் லா ஜர்னல் 303-ல் இருக்கும் பிரிவிகவுன்சில் தீர்ப்பையும், 1954 (1) மதராஸ் லா ஜர்னல் 11-ல் இருக்கும் தீர்ப்பையும் கவனிக்கவும்.)

## இறந்த இந்து ஸ்திரீயின் நகைகளுக்கு வார்சு யார்?

21. **கேள்வி:** (P. 2813-வெங்கடசாமி நாயக்கர்—கோயில்பட்டி.) இந்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மூத்த தாரம் ஒரே பெண் குழந்தையை விட்டுச் சுமார் 30 வருடங்களுக்கு முன் இறந்தாள். பிறகு அவர் இரண்டாம் தாரம் விவாகம் செய்து இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் இருக்கின்றனர். முதல் தாரம் இறக்கும் போது அவளுடைய சுமார் ரூ. 1000 பொறுமானமுள்ள நகைகளைத் தாமே வைத்துக் கொண்டார். முதல் தாரத்தின் மகளை மோசம் செய்யும் எண்ணத்துடன் அவர் தம்முடைய சொத்துக்களை இரண்டாம் தார மக்கள் பேரில் பட்டா வாங்கி, பாகம் செய்து கொடுத்திருக்கிறார். முதல் தார மகள் தகப்பனுர் சொத்தில் பாகம் பெற அருகதையுடையவரா அல்லவா? தாமே தாவா செய்யலாமா, அவளுடைய மக்கள் தாவா செய்ய வேண்டுமா? காலாவதி என்ன?

**பதில்:** முதல் தாரத்தின் நகைகளுக்கு அவள் இறந்த பின் அவளுடைய பெண்தான் வார்சு. அந் நகைகளையோ, அவற்றின் பொறுமானத்தையோ, தகப்பனிடமிருந்து அப்பெண் அடையலாமே ஒழிய, தகப்பனுடைய சொத்தில்

பாகம் கேட்க முடியாது. பாகத்திற்காகத் தாவா செய்யவும் முடியாது. நகைக்குத் தான் காலாவதி கெடுவுக்குள், தாவா செய்யலாம். காலாவதி விஷயமாகக் கேள்வியில் கொடுக்கப் பட்டிருக்கும் விவரங்கள் போதா.

## புத்தி சுவாதீன மில்லாதவர் செய்து கொடுத்த சாசனம்

22. கேள்வி: (P. 2822—ஆரியப்பெருமாள்-தீராம்பாளையம்) ஒரு இந்துக் குடும்பத்தில், தகப்பன் இறந்து விட்டார். அவருக்கு ஒரு ஆண் ஒரு பெண் மக்கள் இருக்கிறார்கள். ஆண்மகனுக்குக் கலியாணமாகிப் பிள்ளை இல்லை. ஷை யாருக்குப் புத்தி சுவாதீன மில்லாதிருக்கும் போது அவருடைய பெண்சாதி ஷை குடும்பச் சொத்து நிலம் வீடு முதலிய சொத்துக்கள் யாவும் தன்னுடைய பெயருக்கு சாசனம் வாங்கிக் கொண்டு அவளுடைய இஷ்டம் போல் யாருக்காகிலும் ஷை சொத்தைக் கிரயமோ, தான சாசனமோ போக்கியமோ எழுதி வைத்தால் செல்லுமா? சித்த சுவாதீனமில்லாதவருடைய தாயும், சகோதரியும், சகோதரி மக்களும், பங்காளிகளும் இருக்கிறார்கள். இவர்களில் யார் என்ன செய்ய வேண்டும்?

பதில்: புத்தி சுவாதீனமில்லாமலிருக்கும் போது, அவர் தம்முடைய பெண்சாதிக்குச் செய்து கொடுத்திருக்கும் சாசனம் செல்லாது. அதை ஆதாரமாகக் கொண்டு அவள் செய்யும் பாராதீனங்களும் செல்லா. புத்தி சுவாதீன மில்லாதவருக்கு ஒரு கார்டியன் நியமிக்கும்படி உறவினர் யாரும் ஜில்லாக் கோர்ட்டுக்குக் கார்டியன் மனுப்போடலாம்.

## இந்துச்சட்டம்--மூன்று மனைவிகள் --ஐந்து ஆண்மக்கள்--வார்சு பாத்தியம் எப்படி?

23. கேள்வி: (P. 2894 — ரஹீம்கான்— காட்டுமன்னார்கோயில்.) பலதாரத் தடைச் சட்டம் வருவதற்கு முன்பு ஒரு இந்துவுக்கு மூன்று மனைவிகள் உண்டு. முதல் மனைவிக்கு ஒரு ஆண்மகன் உண்டு. முதல் இரண்டு மனைவிகளும் இறந்து விட்டார்கள். மூன்றாவது மனைவிக்கு நான்கு ஆண் குழந்தைகள். அந்த இந்துவுக்குள்ள பூர்வீகச் சொத்தில் முதல் மனைவியின் மகனுக்கும், மூன்றாவது மனைவியின் மகன்களுக்கும் உள்ள பாத்தியதை என்ன?

பதில்: முதல் மனைவியின் மகனுக்குச் சொத்தில் 6ல் 1 பங்கு உண்டு. மூன்றாம் மனைவியுடைய நான்கு ஆண்மக்களுக்கும் ஒவ்வொருவருக்கும் 6ல் 1 பங்கும், மூன்றாம் மனைவிக்கு 6ல் 1 பங்கும் உண்டு. மூன்றாம் மனைவி அவளுடைய பாகத்தைத் தன்னுடைய ஆயுள்வரை தான் அனுபவிக்க முடியும். அவள் இறந்த பிறகு அப்பாகம் 5 பங்குகளாக்கப் பட்டு முதல் தாரத்தின் ஆண்மகன் உள்பட ஒவ்வொரு ஆண்மகனுக்கும் 5ல் 1 பாகம் கிடைக்கும்.

## மனைவி பெயரில் மனை. வீடுகட்டியது கணவன். மனைவி இறந்து விட்டால் வீடு யாருடையது?

24. கேள்வி: (கனி.) ஒரு வியாபாரி காலிமனை ஒன்றை ரூ. 5000-க்குத் தன் மனைவியின் பெயரில் சுத்தக் கிரய சாசனம் வாங்கி அதில் சுமார் லக்ஷம் ரூபாய் செலவழித்து ஒரு வீடு கட்டுகிறார். அந்த மனைக்கட்டு வாங்கிய பணமும் வீட்டுக்குச் செலவான பணமும் அவ்வியாபாரியுடைய பேரேட்டில் விபரமாகப் பற்று எழுதப் பட்டிருக்கின்றன. அந்தந்த வருஷ வருமான வரியும் ஒழுங்காகச் செலுத்தப்பட்டிருக்கின்றன. துரதிர்ஷ்ட வசமாக அவருடைய மனைவி குழந்தை இல்லாமல் இறந்து விடுகிறாள். அவளுடைய நெருங்கிய சுற்றத்தார்கள் அந்த வீட்டில் பாத்தியம் கொண்டாடுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த வியாபாரி வீட்டைத்தாமே அடைய சட்டத்தில் இடமுண்டா?

பதில்: 'பெயர் இரவலா'க வாங்கப்பட்ட சொத்தானது சொத்து வாங்கியவருக்குத் தான் சொந்தம். மனைவியின் பெயரில் மனை இருந்தாலும் அவள் அதற்குச் சொந்தக்காரி அல்ல. அவள் இறந்தாலும் அவளுடைய வார்சுகளுக்கு அதில் யாதொரு உரிமையும் ஏற்படாது. உண்மையில் காலி மனையானது மனைவிக்காகவே வாங்கப்பட்டு அவளே அதன் சொந்தக்காரியாக இருந்தாலும், ஏராளப் பணம் செலவு செய்து வீடு கட்டிய அவளுடைய கணவர் பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் வேறு ஒரு சட்ட விதி இருக்கிறது. இதற்கு ஆங்கிலத்தில் 'Acquiescence' என்று சொல்லுவது. அதாவது சும்மா இருப்பதால் ஒப்புக் கொள்ளுவது. உதாரணமாக உங்களுக்குச் சொந்தமான ஒரு காலி நிலத்தில் நான் பணம் செலவு செய்து ஒரு வீடு கட்டுவதை நீங்கள் பார்த்துக் கொண்டு எனக்குப் பாத்தியமில்லாமல் நான் செய்யும் தவறைத் தடுக்காமல் சும்மா இருந்து விட்டால், நீங்கள் அக்காலி நிலமானது என்னுடையதென்று ஒப்புக்கொள்ளுவது போலவே சட்டம் பாவிக்கும். அதாவது காலிநிலம் உங்களுடையதென்றும் நான் அதை விட்டு வெளியேற வேண்டும் என்றும் நீங்கள் கட்சி சொல்ல முடியாமல் சட்டம் உங்களைத் தடை செய்து விடும். இந்த நியாயவிதிப்படி தடைப்பட்ட மனைவி இறந்து

187728
... 600 008

விட்டாலும் அவளுடைய வார்சுகளுக்கும் அதே தடை உண்டு.

## வேறு ராஜ்யத்துடன் வியாபாரம். வியாபாரி வசூல் செய்யும் விற்பனை வரி

25. **கேள்வி:** (Y. A. கனி. அய்யம்பேட்டை) "வெளி மாகாணங்களுக்கு விற்பனை செய்யும் சரக்கிற்கு ஸேல்டாக்ஸ் விதிவிலக்கு இருப்பதால், புதிதாக ஸ்தாபிக்கபபட்ட ஆந்திரமாகாணத்தோடு விற்பனை செய்யும் சரக்குகளுக்கு ஸேல்டாக்ஸ் இனி வாங்காமலிருக்கலாமா?" என்று ஸேல்டாக்ஸ் அதிகாரி ஒருவரிடம் நேரில் கேட்டதற்கு அவர், "அம்மாதிரி வாங்க வேண்டாமென்று சர்க்கார் இன்னும் உத்தரவு வெளியிடவில்லை. ஆனதால் முன்போல் அவைகளுக்கும் உத்திரவு வரும் வரை, ஸேல்டாக்ஸ் வசூலிக்க வேண்டியது தான். அப்படி வசூலிக்கப்படும் தொகை சர்க்காரைச் சேர்ந்ததுதான்; வசூலிக்கப் பட்டவர்களிடம் அதை திருப்பி 'ரீபண்ட்' கொடுக்கச் சட்டத்தில் இடமில்லை, என்கிறார். இது சம்பந்தமான சட்டம் என்ன?

**பதில்:** வெளிராஜ்யங்களுக்கு விற்கப்படும் சரக்குகளுக்கு விற்பனை வரி கிடையாது. ஏனென்றால் அரசியல் அமைப்புச் சட்டத்தில் அவ்விதம் இருக்கிறது. ஆனால் ஒரு வியாபாரி, சரியாகவோ, தவறாகவோ, தம்மிடம் சரக்கு வாங்குபவர்களிடம் விற்பனை வரி வசூல் செய்து விட்டால், அத்தொகை ஜாடாவையும் அவர் சர்க்காரிடம் கொடுத்துவிட வேண்டுமென்று விற்பனைவரிச் சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கிறது. அதாவது சட்டப்படி அவ்வியாபாரி சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய விற்பனை வரித்தொகையைவிட அவர் வாடிக்கைக்காரர்களிடம் வசூல் செய்திருக்கும் விற்பனை வரித் தொகை அதிகமாக இருந்தால், அப்படி அதிகமாக இருக்கும் தொகையும் சர்க்காரைத்தான் சேரும். (விற்பனைவரிச் சட்டம் செக்ஷன் 8B(2)) மேலும் வியாபாரிகள் தங்களிடம் சரக்கு வாங்குபவர்களிடம் கட்டாயமாக விற்பனை வரி வாங்க வேண்டுமென்று விற்பனை வரிச்சட்டத்தில் யாதொரு ஷரத்துமில்லை. ஆனால் சட்டப்படி அவர்கள் கொடுக்க வேண்டிய விற்பனை வரியை அந்தந்த வாடிக்கைக்காரரிடம் வாங்கிக் கொள்வதைச் சட்டம் அனுமதிக்கின்றது. இவ்விஷயம் விற்பனை வரிச்சட்டத்தையும் விதிகளையும் பொறுத்ததே ஒழிய அதிகாரிகளுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்ததல்ல.

## தஞ்சைச் சட்டம்—சட்டம் அமுலுக்கு வந்த பிறகு வந்த குத்தகைதார்களின் குத்தகைக் கெடு என்ன?

26. **கேள்வி:** (L 2807) தஞ்சைச் சாகுபடிதார்—பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி ஒரு வேலிக்கு மேல் பட்டவருக்குள்ள நஞ்சை நிலத்தை சென்ற வருடம் வரைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்த ஒரு நபர் சென்ற வருடம் முடிவோடு தாமாகவே, குத்தகை நிலம் தேவை இல்லை என்று ரத்துச் செய்தபின், இவ்வருடம் முதல் ஷை நிலத்தை அல்லது ஓர் பாகத்தைச் சாகுபடி செய்து வரும் நபர் தொடர்ந்து ஷை நிலத்தை 5 வருடங்களுக்குச் சாகுபடி செய்யும் உரிமை உண்டா?

**பதில்:** தஞ்சைச் சட்டத்தின் செக்ஷன் 6-ன் படி—1-12-1951 தேதியில் நிலத்தைச் சுவாதீனம் வைத்துக்கொண்டிருந்த குத்தகைதார் அல்லது சாகுபடிதார்களும், 1950—51 விவசாய வருடத்தில் சாகுபடி செய்து இச்சட்டப்படி மனுப்போட்டு மறுபடியும் நிலத்தைச் சுவாதீனம் எடுத்துக் கொண்ட குத்தகைதார் அல்லது சாகுபடிதார்களும் தான் 1952—53 விவசாய வருட ஆரம்பத்திலிருந்து, அதாவது 1-5-1952 முதல் 5 வருடங்களுக்கு, அதாவது 30-4-1957 வரை சாகுபடி செய்ய அவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சைச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு புதிதாகக் குத்தகை அல்லது சாகுபடிக்கு ஒப்புக் கொள்ளுகிறவர்களுக்கு மேற்கண்ட 5 வருட கெடு வரை சாகுபடி செய்யும் உரிமை சட்டத்தில் வியக்தமாகக் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும், செக்ஷன் 10ல் கண்ட காரணங்கள் இருந்தாலும்தான் இவர்களை நிலத்தை விட்டு அகற்ற முடியும். ஏனென்றால் 5 வருட கெடு ஷரத்தானது இவர்களுக்குப் பொருந்தவில்லை.

## இஸ்லாமியச் சட்டம்—வார்சுகளின் பாகம்.

27. **கேள்வி:** (அப்துல் மஜீது—மாயூரம்) ஒரு முஸ்லீம் ஸ்திரீ இறந்து போனபிறகு ஷை யாருக்குச் சொந்தமான சொத்து அவருடைய கணவருக்கும், பெண்களுக்கும் இஸ்லாமியச் சட்டப்படி எந்த விகிதாசாரத்தில் கிடைக்கும்?

**பதில்:** கணவருக்கு 4ல் 1 பங்கும் பெண்களுக்கு 4ல் 3 பங்கும் உண்டு.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

# தமிழில் சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

"வக்கீல்" 1953-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை .ரூ 3 12 0

"வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

"வக்கீல்" 1951-ம் வருடம் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனாக்கள், குத்தகைப் பத்திர நமூனா, வார சாகுபடிப் பத்திர நமூனா உள்பட விளக்கம்] ரூ. 0 6 0

சரக்கு விற்பனைச் சட்டம் [The Indian Sale of Goods Act] ரூ. 1 8 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

வி. பி. பி. கிடையாது.

அணா 8 சேர்த்து அனுப்பினால் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

**மானேஜர்,**

"வக்கீல்" காரியாலயம்,

தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S.I)


# "வக்கீல்"

## பொது மக்களுக்கான உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,

[ஆசிரியர்]


### "வக்கீல்" சந்தா விபரப்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் எனற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

### "வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | | |
|---|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. | 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. | 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. | 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. | 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. | 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. | 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்




பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்கு குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*

For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris:*

B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
COIMBATORE.